வுள் துணை

க...ரியோகாநந்தம்.

இஃது

125 / III—1919

கோக்கறிக்

ஸ்ரீ ம. சுப்பையா தேசிகன்

இயற்றியது.

இவை இயற்றியவருல்,

தஞ்சை "தாரா அச்சுக்கூடத்தில்," பதிப்பிக்கப்பெற்றது.

1919வூ மார்ச்சுமீ

(காப்பிகள் 500.)

R6 N19 129236

உ

கடவுள் துணை.

கலைமணியோகாநந்தம்.

இஃது

கோக்கறிக்,

ரு. ம. சுப்பைய்யா தேசிகன்.

இயற்றியது.

இவை இயற்றியவருல்,

தஞ்சை "தாரா அச்சுக்கூடத்தில்," பதிப்பிக்கப்பெற்றது.

1919௵ மார்ச்சுமீ

(காப்பிகள் 500)

179236

கலை வெண்பா.

1. மூலக் கணபதியை மூன்றெழுத்தைத் தூக்கிவிட்டு
சாலவுமே நன்றாய் சலிப்பறவே—காலமதில்
வேலவனை முன்னோக்கி வேண்டிநின்றால் கோலமுடன்
காலனுமே வாறான் கண்முன்னே.

2. ஐம்பத்தோ ரட்சரமாய் ஆறாதா ரத்தினுள்ளே
பைம்பொற் சிவயோக வாசியினால்—ஸ்தம்பித்து
ஐந்தும்ஒன்றும் ஆறதாய் ஆறாவ தாமிடத்தில்
பந்துசென்று விளையாடும் பார்.

3. மூலக் குகையதனை மூச்சதனை முத்ததனை
காலத் துளியளவு கண்டுகொண்டால்--காமன்கணை
காவிடுக்கு புண்தனக்கு கறைந்துருகி நிற்காரே
சீலமுள்ள செல்வன் மகன்.

4 உற்றார்க ளாயினுமே உறவின் முறைதான்சரிபே
பெற்றோர்க ளாயினுமே பிரியாதாரில்லையே—றவிமதியை
சற்றாகிலும் கண்மூடி. தனித்திருந்து பற்றினால்
பழவினையும் பறந் தோடுமே.

5. கண்டால் கருத்தரியும் கண்டுகொண்டால் உருத்தெரியும்
செண்டு றெண்டுவீசி செழிப்புடனே--விருத்தியுடன்
கண்டாரும் உண்டே கருத்தரிந்து கதிர்மதியை
உண்டாரும் உண்டே உலகில்.

6. ஆனஉயிர் ஆனஉடல் அத்தனையும் மண்தின்றால்
யீனமுள்ள கை தொழிற்கள் யெத்தனையோ செய்வாய்—
பார்தன்னிலே பரிதிமதி இறண் டினையும் [தீரமுடன்
உருதியுடன் உட்கொள்வாய் நீ.

7 மூலச் சுழிமூன்றும் முச்சுடறை யொத்திருக்கும்
காலமுடன் கண்டு சென்றால்—சுழிமுனையில்
ஞாலமதில் மேதினியில் ஆலமுடன் விருதெடுத்து
நின்றாரும் மயிர்ப்பாலம் காண்பார்.

8. வான்வாழும் தேவர்கணம் யான்வாழும் பூமிகனம்
சாண்வாழும் சிவகணத்தின்—சந்நிதியை
நான் சாகாமுன் னருள்வாய் யிதமகிழ்ந்து
காண்கரிய நந்தியனே காட்டும்.

9. உற்றாரும் பெற்றாரும் செற்றால் வருவரோ
பற்றாதே பாழ்மனமே—யெற்றாலும்
கற்றரியா மூடரிடம் நற்கதையை நல்லறிவை
விற்றாலும் விற்காதுகாண்.

10. நரைமாற்றும் பாற்குடத்தை நல்கும் கிருபையுடன்
குறைமாற்றும் குன்றே குணவடிவே—திரைமாற்றும்
கடலமுதைத் தந்தெனக்கு உடல்முழுதும் வெண்ணீறாய்
குடல்நாற்ற மில்லாது கூர்.

11. வேதாந்தி யென்று வெளியாகிச் சென்றாலும்
வேழாண்டி யென்று விறட்டுவார்—புவிமீதில்
காசாசை கொண்ட கதியரியா நிர்மூடர்
பாசவினை போகப் பகர்.

12. புல்லாகி நெல்லாகி புவியுளோர் தனைக்காக்கும்
வல்லானே வல்வினையைச்—சொல்வினையால்
நல்லானே யென்று நவிலும்படி யெனக்குச்
சொல்லா லோருண்மை சொல்.

13. காட்டானை தின்னும் கனியை யெனக்களித்து
நாட்டார் நகைக்காமல் நல்வார்த்தை—யொன்றளிப்பாய்
வீட்டானை மேலேறி வீதிவலம் சுற்றிவரக்
கோட்டானை முடிமீதி லேற்று.

14. செந்தாழை மலரே செழித்திருக்கும் செம்பொன்னே
உன்றாளில் வீழ்ந்து உளமகிழ்ந்தேன்—மனமகிழ்ந்து
உன்றோளிலேற்றி உன்மைந்த னாக்கி யென்னை
தென்றேச மேகாது செய்.

15. செல்வப் பெருக்கே செழுஞ்சுடரே மூன்றெழுத்தே
அல்லல் வினையகற்றும் அருளானே--உன்னடியை
செல்லவழி விட்டருள்வாய் செம்பவளக் குன்றில்
நல்லதொரு பூங்கொடியை நாட்டு.

கலிப்பா.

திருவாரூர் வாழ்தியாகேசா நின்சரணம் வுன்னடிமை
அருவாயும் உருவாயும் அருள்சோம னுதயம்
கருவாய்க்குள் ளெத்தாதகனி புசித்தாற் பிரவியில்லை
மருவாய்ப் பிணியகற்றும் மருந்தாகும் ஆரூரான்.

வெண்பா.

1. போற்றி திருவடிக்கே புநிதனும் தொண்டமான்
தோற்றியதோர் புற்றினிடம் மாற்றரியாப்--பொன்னை
மாற்றுரைத்த பிள்ளையார் மணவரையில் வீற்றிருக்க
காற்றிரமாய் நின்றாரே காண்.

2. அல்லியங் கோதாய் அருளளிக்கும் செந்தேனே
மல்லிகைமுல்லை மலரே யிதழ்விரியப்—பூத்தருள்வாய்
கொல்லும்யெமன் யென்னைக் கொல்லக் குருக்கிட்டால்
மல்லனிவ னென்றுசொல்லும் மாதே.

3. கமலாசனத் திருக்கும் கமலாம்பா ளென்னுமங்கை.
விமலருட தேவியாய் வீற்றிருக்கப்--பாற்திருகண்
களிகூர்ந்து கலியகல வெளிவருவாய் கிருபையுடன்
யெளியேனின் றுயர் தீர்ப்பாய் யென்றும்.

4. திருத்தோழன் திருவடியான் கருத்தரியா கண்மணியின் [கண்ணே
பருத்திருக்கும் வயிற்றூனே பவக்கடலே--மனக்கடலால்
அருள்த்தரித்த ஆனந்த அமுதுண்ணும் மாக்கலமாய்
பொருள்த்தரிக்கப் புத்திரனாய் வாரும்.

5. சப்றகூட மஞ்சத்திற் சயனித்திருக்கவும் நீர்
யெப்பொழுதும் வேண்டினேன்--இஷ்டமதாய்
கைலாயம் மேலேரி காக்ஷிதனை யெனக்களிக்கும்
மயிலேரும் பெருமாளே வாரீர்.

6 சிவமுக்தன் செல்வன்சித்தன் செம்பொன் னடிகண்டேன்
தவபக்தன் தாணிதனில் லரிதாகும்--தண்மையுடன்
பவமுழுதும் குருமொழியால் அகற்ற வல்லான்
சிவகணம் போலிருப்பாரே காண்பீர்.

7. செகமுழுதும் மாய்கைதனை செய்துவைத்தாய் யுன்கூற்றை
அகமுழுதும் பொய்யதனை யகற்றிவிட்டு--மெய்க்கூற்றை
குகையதனில் நுழைந்திருந்து கூத்தாடும் திருக்கூற்றை
பகைவரின்றி பாற்பாரே யோஹி.

8. சிவசுப்ர மணியனே சிந்தைமிக நொந்துருகி
அவையவங்க ளெல்லாம் அனல்மெழுகாய்--யாகுமவர்
குறையகற்றும் வல்லானே குமரனே குருபரனே
திரைமறைவில் வீற்றிருப்ப தென்ன.

9. சிவசிவா வென்றிருக்கும் தெருவீதி சுற்றிவரும்
சிவகணங்க ளெல்லாம் சிறந்திருக்கும்—நேற்றியதாய்
முழுத்தேங்காய் கொண்டுவந்து முன்னேயுடைத்து
பழுப்பேறு கற்பூரத் தீபமதேன் காண். [வைத்து

10. வோயாதோ யென்கவலை யுள்ளுருகி யாநந்தம்
பாயாதோ யென்மனம்தான் பாற்கடலிற்—றேயாதோ
சேயாக்கி யுன்மடியிற் வைத்திருத்திச் சீராட்டி
தாயாகக் கருணைவைத்துக் கார்.

கலி நிலை.

தேசமெங்கும் சிறந்திருக்கும் தென்கயிலை நாட்டானின்
[திருவடியை
வாசமுடன் மனமுவந்து கருத்தில் வைத்தாற் றிருத்தணிகை
வேலவனும் வள்ளிபங்கன் குருவருளால் வீடளிப்பான்
காலனெனும் யெமபாசம் கலகலென விரைந்தோடும் காண்பீர்.

குழைத்திட்டேன் கும்பிட்டேன் குனிந்தெழுந்து நிமிர்ந்திட்டே
தழைத்திருக்கும் பச்சிலையை தானெடுத்து சாற்றிநின்றேன் [ன்
பிழைத்திருக்கும் வகையரியாப் பித்தனெனும் யென்றனையும்
அழைத்துகந்து அருகில்வைத்து அருளமூர்த மூட்டுமய்யா.

வுடல்முழுதும் பீற்றலாம் வொன்பதுவாய் நாற்றமாம்
வுடல்முழுதும் மேலழகாம் வுவற்கேணி நாற்றமதாம்
கடல்முழுதும் கப்பல்வைத்தும் கரைகாணா மாய்கையதாம்
சடலமெனும் பெண்ணாகி சனியனுமாய் வந்ததுவாம்.

வெண்பா.

1. கன்னிமுகம் பூத்திருக்கும் கன்னல்மொழி மாதவளாம்
கண்ணிமைக்கும் விற்புருவம் கன அழகாம்—வள்ளிதனை
பன்னிருகண் வேலவனும் பரிந்துநின்றான் கிழவனுமாய்
கன்னியவள் கும்பமதைக் காண்க.

2. நேற்றிருந்தார் இன்றில்லை காற்றிருந்தார் பொருள்
[முழுதும்
நேற்றியதாய் கணக்குடனும் வருக்குடனே—செருக்கு
[முடன்
வீற்றிருந்தார் வினைவசத்தின் செயலரியா வீணாவர்
வுயிர்போயின் பொருள்முழுதும் போச்சே.

3. பாற்தருளும் பாவியெனை தீர்த்தருளும் வினையதனை
காற்தருளும் அடிமுடியை காண்பதற்கு—பாற்முழுதும்
பாற்க அரிதாகாமல் பண்புடனே யென்னுளத்தில்
தீற்கமுடன் தெரிசனையைத் தாரும்.

வேதம் நாலுயென்பது.

நம்முடைய மூக்கில்நின்றும் வெளியாகி யழிந்துபோகிற கலை ச

சாஸ்திரம் ஆருயென்பது.

நம்முடைய ஆராதாரஸ்த்தானம் ... ... சு

பதினெண் புராணம் யென்பது.

மூலாக்கினியாகிய நக்ஷத்திரம் ... ... க

நவத்துவாரம்... ... ... கூ

திரேகம் சாண் ... ... அ

இருபத்தெட்டு ஆகமமென்பது.

சூரியனுக்கு வாசி குதிரை ... ... ௰உ

சந்திரனுக்கு முன்கலை ... ... ௰சு

முப்பத்திரண்டு மனுவிக்யானமென்பது.

வலதுபக்கம் யேருகின்ற அமுர்தகலை ... ... ௰சு

இடதுபக்கம் யெறங்குகின்ற அமுர்தகலை ... ... ௰சு

அருபத்திநாலு கலைக்யானம் யென்பது.

நவக்கிரஹம்... ... ... கூ

ராசி... ... ... ௰உ

நக்ஷத்திரம் ... ... உள

சந்திரனுக்கு பின்கலை ... ... ௰சு

தொண்ணூத்தாரு தத்துவம் யென்பது.

ஓம்காரத்திற்கு தத்துவம்	... ...	௪௰௧
ந காரத்திற்கு தத்துவம்	... ...	௪௰௧
ம காரத்திற்கு தத்துவம்	... ...	௪௰௧
சி காரத்திற்கு தத்துவம்	... ...	௪௰௧
வ காரத்திற்கு தத்துவம்	... ...	௪௰௧
ய காரத்திற்கு தத்துவம்	... ...	௪௰௩
ஆக நமக்கு வேலைக்காரர்கள்	... ...	உசஅ

இந்த இருநூத்தி நாற்பத்தெட்டு பெயர்வழிகளையும் நாம் வசம்பண்ணிக்கொள்ள வேண்டியதற்காகத்தான் யோஹம் செய்ய வேண்டியது. அப்படி வசமாய்விட்டால் நமக்கு மாணமில்லை மோக்ஷ வீட்டையும் கட்டிக்கொடுப்பார்கள்.

இந்த இருநூத்தி நாற்பத்தெட்டுப் பெயரையும் அன்பத்தெட்டுப் பெயராக க்யான சாதகத்தில் சுருக்கிச் சொல்லப்பட்டிருக்கின்றது.

(மூலாதாரம் முற்றிற்று.)

இரண்டாவது கலைமணி.

க்யர்னசாதகம் முதற்பாகம்.

உ. ஃ. அ. உ.

வேதம்	... ...	4	...	சுழிமுனையில் கலைநாலு.
சாஸ்திரம்	... ...	6	...	ஆரு ஆதாறம்.
நவக்கிரஹம்	... ...	9	...	நவத்துவாரம்.
நக்ஷத்திரம்	... ...	1	...	உச்சிக்குழி.
சாண்	... ...	8	...	திரேகம்.
ஆக ஆகமம்	... ...	28		கூடியது ஒரு மனிதனுக்கும்

இருபத்தெட்டு யென்ற உகாரம் அகாரத்தை மாற்றினால் அகாற உகாறமாகி வொரு மனிதனுக்கு வாசிக்குதிரையாகும்;

மூணும் இறண்டும்	... ...	5	...	மனுவிக்யானம்
ஆறும் நாலும்	... ...	10	...	கலைக்யானம்
ஒன்பதும் ஆறும்	... ...	15	...	தத்துவம்
ஆக யினம்இரண்டிற்குகூடியது		58	...	இதில் அன்பத்தாரு

மறைவாகும் மிச்சம் இரண்டுதான் ஆகும் தன்னைத்தான் அறிந்தவர்களுக்கு அன்பத்தெட்டும் நிலைநிற்கும்.

சிவஸ்தலங்களுக்கு மடாதிபதிகளாகிய திருச் சந்நிதானங்களுக்கு யெழுதித் தெரிவித்துக்கொண்ட க்யான சுயராஜியம் யாதென்றால் நம்முடைய பரமசிவனுக்கு மூன்றுபெயர் உண்டு எப்படியென்றால் முதலாவது பெயர் தம்பிரான் இரண்டாவது பெயர் ஆண்டி மூன்றாவது பெயர் பண்டாறம் இதற்குப்பொருள் தம்பிரான் யென்றால் அண்டபிண்ட சராசறங்கள் அனைத்தையும் தனக்குச் சொந்தமாக ஆளக்கூடியவனுக்கு பெயராகும். ஆண்டியென்றால் யெப்படியிருக்கும் தனக்கு பதினாலு லோகங்களும் சொந்தமாக இருந்தும் தானணிந்திருக்கும் கவுபீஷணங்கூட தனக்குச் சொந்தமில்லை யென்பதாக நினைத்திருக்கும் பண்டாறம் யென்றால் பண்டு யென்பது தருமம் ஆரம் யென்பது மாலையாகும் கவுபீஷணங்கூட தனக்குச் சொந்தமில்லை யென்பதாக நினைத்திருக்கும் மஹான்களுக்கு தருமம் யென்ற மாலையானது எதைக்கேட்டாலும் தருவித்துக் கொடுக்க சித்தமாக காத்திருக்கும்.

தருமம் என்றால் எதற்குச் சொல்லலாம்? நமக்குள் ளிருந்து நம்முடைய சுழிமுனையில் நின்றும் நம்மையேமாத்திவிட்டு தினப்படி இரவும் பகலுமாக ஓய்வின்றி வெளியில் ஓடிப்போவதாகிய நாலுவேதம் என்ற நாலுகலைகளுக்கும் பெயராகும் இந்த நாலுவேதம் என்று கலைநாலையும்

நிலைநிற்கச்செய்தால் நாம் கேட்டதெல்லாம் சித்திக்கும் நம்முடைய திரேகத்தையும் மண் தின்காது மருபிரவியுமில்லை நாமே பரமசிவமாகுவோம் நடத்திவரும் கற்பூரத் தீபாருதனைகள் நமக்கே அற்பணமாகும் எமவாதனையுமில்லை.

நம்முடைய எண்ஜாண் திரேகத்தினுள்ளிருக்கும் சிவனை நம்முடைய திரேகத்தில் நின்றும் வெளியாகாமல் கட்டிக்கொள்ளத் தெரிந்தால்மட்டும்தான் நமக்குப் பண்டார சந்நதியென்ற பெயராகும் சிவனை தன்னுக்குள் அடக்கஞ்செய்பத் தெரியாதவரையிலும் வீண்சாப்பாட்டு வேஷதாரியாகுவோம் எமன் விடமாட்டான் நிச்சயம்.

இவைகளை யேனுக்காக எழுதவேணுமென்றால் நாலுவேதம் ஆறுசாஸ்திரம், பதினெண்புராணம், இருபத்தெட்டு ஆகமம், முப்பத்திரண்டு மனுவிக்யானம், அறுபத்திநாலு கலைக்யானம், தொண்ணூத்திஆறு தத்துவம் யென்ற பெரிய கருங்கடலாகிய திறைமாய்கையை சிரியதோர்குளமாகச் செய்து கருங்கடலில் நீந்திச் சாகாமல் குளத்தில் நீந்திக் கரைசேரும்படியாக எழுதினதாகும்.

இரண்டாம் பாகம்.

இவைகளுக்கு சூட்சுமக்கியானம்.

வேதம் நாலு யென்பது, சுழிமுனையில் கலைநாலு, சாஸ்திரம் ஆறுயென்பது ஆறுதாரத்தில் ஆறுவது ஸ்தானம், நெற்றிக்கண்வரையில். புறாணம் பதினெட்டு யென்பது பிறந்த நக்ஷத்திரம் 1. நவக்கிரஹம் 9. திரேகம் சாண் 8. ஆக லெக்கம் யெண்ணிக்கை பதினெட்டும் கலைநாலும் ஆதாரம் ஆறும் ஆகமம் இருபத்தெட்டும் ஒன்றுசேர்ந்தால் ஆக ஐம்பத்தாறும் இந்த லெக்கம் ஐம்பத்தாறும் ஒரு சக்கரவர்த்திக்கு தேசம் ஐம்பத்தாறும் என்று சொல்லலாம் இருபத்தெட்டு ஆகமம் என்ற உகார அகாரத்தை மாற்றிப்பார்த்தால் அகார உகாரமாகும் மேற்கண்ட ஐம்பத்தாறுதேசத்திற்கும் இந்த அகார உகாரம் சக்கிரவர்த்தியாகி நீதிசெலுத்தும்.

மனுவிக்யானம் முப்பத்திரண்டு என்பது, மூணும் இரண்டும், ஐந்தும் நம்முடைய பஞ்சபூதம் இந்த பஞ்சபூதமும் மேற்கண்ட சக்கரவர்த்திக்கு மந்திரியாகும்.

அறுபத்திநாலு கலைக்யானம் என்பது, ஆறும் நாலும் பத்து ஆறுயென்பது நம்முடைய ஆருதாரத்தில் ஆருவது ஸ்தானம் நெற்றிக்கண் என்று சொல்லவேண்டியது நாலுயென்பது நமக்குள்ளிருந்து சுழிமுனையின் வழியாக வெளியில் ஓடிப்போவதாகிய வேதம்யென்ற கலை நாலாகும்.

நம்முடைய நெற்றிக்கண்ணின் இடம் மனக்குறிவைத்து வேதம் என்ற நாலுகலையையும் வெளியில் போகாமல் ஒவ்வொரு கலையாக சுழிமுனையில் அடக்கி மனம் ஒன்றுபற்றி அஞ்ஞானம் யென்ற இரண்டு கண்களையும் மூடிப்பார்த்தால் தத்துவம் தொண்ணூத்திஆறு யென்ற ஒன்பதும் ஆறும் பதினைந்தும் பூரணச்சந்திரனுக்கு கலை பதினைந்து யென்று சொல்லவேண்டியது கலை பதினைந்து கூடிய சந்திரன் நெற்றிக்கண்ணில் உதயமாகும் ஒரெழுத்தென்பது பரமசிவனுடைய சடாபாரத்தில் சந்திரகலை ஒன்றிருப்பதாக புராணத்தில் சொல்லும் அந்தக் கலையானது நம்முடைய உச்சியில் இருக்கின்றது மேற்சொன்ன பதினைந்து கலையையும் நெற்றிக்கண்ணினிடம் பூர்த்திசெய்து பதினாறும் கலையினிடம் சென்றால் ஒரே சோதியாகிவிடும். எமனுக்கு வேலையில்லை ஓடிப்போவான் இப்படிக்குச் செய்து முடித்த வல்லபன்தான் சாமியென்பதும் கடவுள் யென்பதும். யெண்ணும் பதினாறு வயதுயென்ற மார்க்கண்டனும் அவனேயாகும்.

மூன்றும் பாகம்.

நாலுவேதம் ஆறுசாஸ்திரம் என்றநாலுகலையும் ஆறு ஆதாரத்துடன் நாலும் ஆறும் பத்துமாதம் சென்றவுடன் பதினொன் புராணம்யென்ற தனது நக்ஷத்திரம்ஒன்றும் நவக்கிரஹம் ஒன்பதும் திரேகம் யெண்சாணும் கூடி பூலோகத்தின் கண் சிரசு வுதயமாகும் சமயத்தில் இருபத்தெட்டு ஆகமம் யென்ற உகார அகாரம் சிரசின்வழியாகச் சென்று தங்கினதும் குழந்தை வெளியாகி மாய்கையைக்கண்டு உ அ என்று அலரு

கின்றது யாவர்களுக்கும் தெரியும். இப்படியாக மாய்கையைக் கண்டு அலறிய குழந்தைக்கு மனு யீசன் யென்றபெயராகும்.

முப்பத்திரண்டு யென்ற மனுவிக்யானம் மூனும் இரண்டும் ஐந்து பஞ்சபூதங்கள் சரிகைகிரிகையை நடத்திவருவது வழக்கம் ஒரு பட்டணத்தை மந்திரியிடம் ஒப்பிவைத்தால் அந்த பட்டணம் நிச்சயப்படாது.

அறுபத்திநாலு கலைக்யானம் யென்ற யோகநிலையானது ஆறும் நாலும் பத்து ஆறுவதில் நாலை பத்து தொண்ணூத்தி ஆறு தத்துவம் யென்ற க்யான நிலையானது ஒன்பதும் ஆறும் பதினைந்தும் நம்முடைய நெற்றிக்கண் பதினைந்து கலையாகும் யெட்டுக்குள் இறண்டை பத்து இப்படிக்கி மனம்பத்தினல் ஆறும் நாலும் பத்து யெட்டும் இரண்டும் பத்து யென்ற யோகமும் ஞானமும் ஒன்றுசேர்த்து கலை பதினைந்து யென்ற பூரணச் சந்திரன் உதயமாகும் அந்தச்சமயத்தில் அகார உகாரம் யென்ற அரசன் யெழுந்து செங்கோல் பிடிப்பான் நம்முடைய யெண்சாண் தேகம் யென்ற கோட்டையானது பூலோகம் எத்தனை தரம் அழிந்தாலும் நம்முடைய கோட்டையழியாது இவ்விதம் தேகம் அழியாமலும் சீவன் தன்னைவிட்டு நீங்காமலும் இருக்கும்படியாக இச்சையுள்ளவர்கள் தெளிந்த ஞான குருவினிடம் ஓரெழுத்து இவ்விதமாக இருக்குமென்றும் முச்சுடர் இவ்விதமாக இருக்குமென்றும் தெரிந்துகொண்டு அந்தப்படி சாதனை செய்தால் மோக்ஷ வீட்டிற்குள் புகுந்துகொள்ளலாம் மறுபிறவியில்லை இது நிச்சயம்.

மதம் மூன்றிற்கும் பொருள்.

இப்பொழுது இந்தியாவில் நடந்துவரும் மதம் மூன்றிற்கும் வாதம்செய்து வரும் மஹாபுண்ணியவான்களுக்கு யெழுதியது யென்னவென்றால் ஹிந்துமதம் முகம்மதியமதம் கிறிஸ்து மதமாகும் ஹிந்துதேசத்தில் எற்கனவே ஆதிமதம் ஹிந்து

மதம்தான் முஸ்லீம்கள் இருந்ததுண்டு இருந்தவர்கள் இந்துக்களென்றும் முஸ்லீம்களென்றும் வேற்றுமையின்றி பள்ளிக்குப் போகிறவர்கள் பள்ளிக்குப் போவார்கள் கோவிலுக்குப் போகிறவர்கள் கோவிலுக்குப் போவார்கள். ஒருவர்க்கொருவர் தூஷணிக்கிறதில்லை ஏன் தூஷணிக்கிறதில்லையென்றால் இரண்டு மதத்தினர்களும் சரிகைகிரிகையை நடத்திவந்தார்களே தவிர யோகம் ஞானம் யென்னும் நம்முடைய நாயகனுடைய பாதத்தைக் காணவேணுமென்ற யெண்ணங் கொஞ்சங்கூடயில்லை இதற்காகவே நம்முடைய நாயகன் மகாமஸ்தயென்ற மஹமத் நபியவர்களை பூலோகத்தில் இறக்கி சரிகைகிரிகையை நடத்திவரும் ஹிந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் யோகம் ஞானம் யென்ற மூன்றும் படியையும் நான்காம் படியையும் காண்பிக்கும்படி உத்தரவுசெய்தார்

வேதம் நாலு யென்றால்

இருக்கு	யசுர்	சாமம்	அதர்வணம்
யெனப்படும்	இதற்கு		பதவி
சாலோக	சாமீப	சாரூப	சாயுச்சியம்

இதற்கு விதி.

சரிகை	கிரிகை	யோகம்	ஞானம்

மேற்கண்ட முகம்மத் நபியவர்கள் யாரென்றால் நம்முடைய மஹா விஷ்ணுவைப்போல் அவதாரமாகும் யேதுக்காக மஹாவிஷ்ணு மஹம்மத் நபியாக வரவேணுமென்றால் அறிந்தவர்களுக்கு எல்லாம் ஒன்றேயாகும் கடவுளும் ஒன்றேயாகும் அறியாதவர்களுக்குத் தானும்வேறுதான் தனக்குள்ளிருக்குங் கடவுளும் வேறுதான்.

இரண்டிற்கும் இடையில் கிறிஸ்துமதம் பொதுவாக விளங்குகின்றனவாகும் நாம் யெதைக்கொண்டும் உர்ப்பத்தியாகி வெளிவந்தோமென்றால் நம் மாதாவினுடைய மாதவிடாயைக்கொண்டும் நம்முடைய யெண்சாண் திரேகம் உற்பத்தியாகினோம் உருவமாகினோம்.

முதற்பாகம்.

வெண்பா.

அகாரமுமாய் உகாரமுமாய் அகம்மதுமாய் முகம்மதுமாய்
விகாரமில்லா ஐம்பொறியை விட்டேறித்தார்--மகாரமுடன்
வாசிவழி சென்றேறி மதிறவியும் பந்தாடத்
தேசிகனுர் தன்பாதம் தெளி.

பதம்.

கண்டுகொள்ள வேணும்—இறைவனை
கண்டுகொள்ள வேணும்.
அண்டமெல்லாம்—அது—நிறைந்திருக்கும்
தொண்டர்களிடத்தில் கூடியிருக்கும். கண்டு

கண்டாலும் சொல்லதெரியாது இதைச்
சொன்னலும் விள்ள முடியாது. கண்டு
அலீப் பென்பதாய் அமர்ந்திருக்கும்
அங்கமுழுமையும் படர்ந்திருக்கும். கண்டு

அல்லா கூ வென்பதாய் அணிவகுத்து.
ஒருசொல்லாமேலே அது சுகங்கொடுக்கும் கண்டு
வாசிகுதிரையில் யேறிச்சென்றால்
வழிகாட்டும் அதைத் தெரிவீரே கண்டு

யோகம் ஞானம் யென்பது யெல்லா மதத்திற்கும் பொது வாகயிருக்கும் மகமத் நபியவர்கள் மஹாமஸ்தயென்ற ஞானமஸ் துடன் பூலோகத்தில் வந்திறங்கினர் நபிபிறந்ததும் யாவர்களு க்கும் சந்தோஷமே தவிர துக்கமென்பதில்லை.

நபியவர்களுக்கு பதினறுவது வயதிற்குமேல் தன்னுக்குள் ளிருக்கும் மஹாமஸ்த யென்ற ஞானத்தை வேதமாகச்செய்து நம்மைப்போலொத்த ரூபத்தை வணங்காதீர்கள் நமக்குள்ளிரு க்கும் அரூபத்தை தேடி வணங்கவேணுமென்று அருளிச்செய்

தார் இதை அறிந்தவர்கள் கரைசேர்ந்தார்கள் அறியாதவர்கள் நபியுடன் சண்டைசெய்தார்கள் அதெப்படியிருந்ததென்ருல், கிருஷ்ணன் பாரதயுத்தத்திற்காக அவதாரம் யெடுத்ததுபோ லிருந்தது.

பாரதயுத்தம் யெதற்காக யேற்பட்டதென்ருல் பூமிகனம் குறையவேண்டியதற்காகும்.

இரண்டாம் பாகம்.

இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் மூன்று தர்க்கங்களு ண்டு அதெப்படியென்ருல். ரூபம் அரூபம். பிறவியுண்டு பிறவி யில்லை. மாடு அறுக்கப்படாது மாடு அறுக்கலாம்.

இதற்குக் காரணம்: ரூபங்கள்யெல்லாம் அழியக்கூடிய வஸ் துதான் அதற்குச் சந்தேகமில்லை யெதற்காக ரூபத்தை வண ங்கவேண்டுமென்ருல் அறியாத குழந்தைகள் சாமி யெங்கே யிருக்கு அப்பா? அல்லா யெங்கேயிருக்கு அத்தா? யென்று கேட்டால் நாம் நமக்குள்ளிருக்கும் நாயகனை காண்பிக்க முடி யுமா? முடியாது அதற்காகத்தான் சரிகை கிரிகையென்ற கோவி லென்றும் பள்ளியென்றும் வைத்தார்கள் மேற்கண்ட கோவி லும் பள்ளியும் யெதைப்போல் ஒத்திருக்குமென்ருல் நம்மு டைய யெண்சாண் திரேகம் பள்ளியென்பதும் கோவில்யென் பதும் யென்று சொல்லவேண்டியது. நம்முடைய யெண்சாண் திரேகம்யென்ற ரூபத்தை அழியாமல் அரூபமாகிய வஸ்துவை கொண்டும் நிலைநிறுத்திகொண்டால் ரூபமாகிய கோவிலும் அரூப மாகிய பள்ளியும் குழந்தைகள் தெருவில் விளையாடிவிட்டு வீட்டிற்குள் வந்து நுழைந்து புகுந்துகொள்ளுகிறதே அது போலாகும் இவ்விதமாக சரிகைகிரிகையென்ற கோவிலையும் பள்ளியையும் விலக்கி யோகம் ஞானம் யென்றநாலாம் படியில் யேறி தன்னைத்தான் அறிந்து கடவுள்யென்ற நாய கனுடைய இரண்டுபாதங்களையும் தன் சிரசின்மேல் தூக்கி

வைத்துகொண்டு சுகத்தை அனுபவிக்கிற ஞானிகளாகிய மஸ்த்தான்களுக்கு பிறவியில்லை தன்னைத்தான் அறியாதவர்களுக்குப் பிறவியுண்டு பிறவியுண்டென்றால் நம்முடைய ரூபம் அழிந்த பிறகல்ல நம்முடைய ரூபத்தில் மாத்திப் பிறக்கவேண்டிய இடமிருக்கிறது அந்த இடத்தை ஞானகுருவின்மூலமாய்த் தெரிந்துகொண்டால் பிறவியில்லை ஆடு மாடுகளை நம்முடைய நபியவர்கள் உயிர்வதைசெய்து நம்முடைய வயத்திற்கு ஜீவனம் செய்யும்படியாகவும் குருபான் கொடுக்கும்படியாகவும் நம்முடைய வேதத்தில் சொல்லவில்லை நம்முடைய யெண்சாண் தேகத்தினிடமாக யிருக்கின்ற மாடு யென்னும் மனதை அடக்கி நம்முடைய நாயகனுக்கு குருபான் கொடுக்கும்படி அருளிச்செய்தார் இவைகளையறியாதவர்கள் காபற்யென்றும் இஸ்லாம்யென்றும் சண்டைபோட்டுக்கொள்வார்கள் தன்னைத்தான் அறிந்தவர்கள் வாய்திறக்கமாட்டார்கள்.

இந்தியாவில் விதவா விவாகம்.

விதவா விவாகம் செய்துகொடுக்கலாமென்று சில இந்துக்கள் சொல்லுவார்கள் சிலர் செய்யக்கூடாதென்பார்கள் ஏன் செய்யக்கூடாதென்றால் இதுவரையில் விதாவா விவாகம் நம்முடைய பந்துக்களில் செய்துகொடுக்காமலிருக்க இப்போது நாம் புதிதாகச் செய்யவேண்டுமென்றால் நம்முடைய பந்துஜனங்கள் நமது வீட்டிற்கு வாமாட்டார்கள் பந்திபோஜனமும் செய்யமாட்டார்கள் இதற்காக பயந்துதான் விதவாவிவாகம் செய்கிறதில்லை. இது நிற்க பூலோகத்தில் பதிவிரதா தன்மமுள்ள ஸ்திரீகள் அநேகம்பேர் இருக்கிறார்கள் அவர்களுக்காகவே இந்தப் பூலோகம் உண்டானதும் சந்திரன் சூரியன் உதயமாகி மறைவாகிறதும் மேற்கண்ட உத்தம பத்தினிகளை கட்டாயம் செய்து விதவா விவாகம் செய்துகொடுத்தால் செய்துமுடித்தவர்களுக்குப் பாபதோஷமுண்டு.

இதற்கு தோஷநிவற்றியு முண்டு.

அதெப்படியென்றால் புருஷன் இறந்த விதவையை ஒரு வருஷம் வரையில் வீட்டிற்குள் பெற்றோர்கள் போஷணையில் வைத்திருக்கவேண்டும் புருஷனுக்கு வருஷக்கடன் முடிந்தவுடன் விதவையாகிய பெண்ணை இதற்குமுன் குமரிப்பெண்ணா யிருக்குங்காலத்தில் கழுத்தில் போட்டுக் கட்டிக்கொண்டும் மஞ்சள் குளித்துக் கொண்டிருந்ததுபோல் ஒரு வருஷம் வரையில் விதவையென்று சொல்லாமல் புதுப்பெண்ணாகச்செய்து வைக்க வேண்டியது மூன்றும் வருஷம் முதலில் பொட்டுக்கட்டிக்கொண்டும் மஞ்சள்குளிக்கும் பெண்களுக்கு விதவா விவாகம் செய்து கொடுக்கலாம். புருஷனுக்கு வருஷக்கடன் முடிந்தவுடன் கழுத்தில் பொட்டுக்கட்டிக்கொள்ளமாட்டேனென்றும் மஞ்சள் குளிக்க மாட்டேனென்றும், இனியெனக்கு புருஷன் வேண்டியதில்லை யென்றும்; எந்தப்பெண் சொல்லுகிறதோ அந்தப்பெண்களுக்கு விதவா விவாகம் செய்யக்கூடாது. பத்துவயதுக்குள்ப்பட்ட பெண்களுக்கு விதவாவிவாகம் உடனே செய்யலாம் ஏனென்றால் அதினுடைய கற்புநிலை யழியவில்லை யென்பதாகும்'

தானத்திற் சிறந்தது.

அன்னதானம் கன்னிகாதானம் பெண்களைப் பெற்றோர்கள் கன்னிகாதானமாக விவாகம் செய்துகொடுக்கும்ப:டியாய் வேதத்தில் சொல்லியிருக்க பெண்களுக்கு சிலபேர் வாதக்ஷிணை கொடுக்கிறார்கள் சிலபேர் மாப்பிள்ளைக்கும் வாதக்ஷிணை கொடுக்கின்றார்கள் இப்படி கொடுத்து விவாகம் செய்துகொண்டால் பெண்ணைப் பெற்றோர்களுக்கு கன்னிகாதானத்தின்பலன் யெவ்விதம் கிடைக்கும் ஆனதால் வறதக்ஷிணை வாங்கவும் கூடாது கொடுக்கவும் கூடாது.

மூன்றும் பாகம்.

க்யான வாசகம்.

இந்தப் பூலோகமும் வானலோகமும் ஒருகோழிமுட்டை வடிவாக இருக்குமென்று யாபேர்களுக்கும் தெரிந்த விஷயம்தான்

அதற்கு அண்டமென்றும் பெயருண்டு அண்டத்தில் உண்டான அதிசயங்கள் யாவும் பிண்டத்திலும் உண்டுயென்பது நிச்சயந்தான் அண்டபிண்ட சருசரங்கள் யெல்லாவற்றையும் காப்பாற்றி ஒரு கோழிமுட்டையை நம்முடைய உள்ளங்கையில் வைத்துப் பார்த்தால் யெப்படியோ அவ்விதம் நம்முடைய நாயகன் வைத்துப் பார்க்கின்றான் அதெப்படியென்றால்

ஒரு கோழியானது தன் முட்டையை செறகினால் சூடுண்டாகும்படிசெய்து குஞ்சுக்கு உருவம்முழுமையும் அமைந்தவுடன் குஞ்சு தானாகவே முட்டையில் நின்றும் வெளியில்வந்து தான் சாகிறவரையிலும் தன் வயிற்றுக்கு இறைதேடி திரியுமேதவிர நாம் யெப்படி இந்த உருவாகி வந்தோமென்று ஒரு நாளும் நினைக்காது.

அதைப்போல் நம்மையும் நம்முடைய நாயகன் தன்னுடைய தீன்யென்ற வெளிச்சத்தைக்கொண்டும் சோதியென்ற பிரகாசத்தைக்கொண்டும் வாசியென்ற நுட்பமாகிய சூட்டைக்கொண்டும் இந்த பூலோகம் வானலோகம்யென்ற அண்டம் அதற்குள் அடங்கிய பிண்டங்கள் அனைத்தையும் காப்பாற்றி தன்னை யெது நினைக்கின்றதுயென்று உற்றுநோக்குவான்.

நம்முடைய நாயகனை நினைக்கின்றவர்களை இந்த பூலோகம் யென்ற மாய்கையில் நின்றும் விடுவித்து காப்பாற்றி தானும் அவனும் ஒன்று சேர்ந்துக்கொள்ளும்படி செய்வான் இவ்விதம் அவனும் தானும் ஒன்று சேர்ந்து நாயகன் கொடுத்த ஞானசுகத்தை அனுபவிக்கிற மஸ்தான்கள் ஞானிகள் நாயகனை யெவ்விதம் தெரிந்துகொண்டார்கள்யென்றால் மேற்கண்ட கோழிக் குஞ்சுபோல் வயிற்றுக்கு இறைதேடி தின்றுவிட்டு நாளைக்கழிக்காத அறிவுள்ளவர்கள் யென்னை உன்னில் நின்றும் இந்த பூலோகத்திற்கு அனுப்பி மாய்கையைக்கொண்டும் உன்னை நினைக்காமல் மண்ணாசை பெண்ணாசை பொருளாசை யென்ற சமுத்திரத்தில் தள்ளிவிட்டு யென்னை நீந்தும்படியாகச்

செய்து நீ வேடிக்கை பார்க்கின்றனையே யெனக்கு மவுத்துல் மலக்கு யென்ற யெமன் யென்னிடம் வந்தால் நான் யென்ன சொல்வேன் யென்னை விடமாட்டானே யென்ற பயத்துடன் பன்னிரண்டு வருஷம் நம்முடைய நாயகனிடம் மண்டாடிக் கெஞ்சி கேட்பார்கள் இப்படிக்கு கேட்கும் அறிவுள்ளவர்களிடம் நாயகன் இறக்கப்பட்டு தன்னைத்தான் அறிந்த மஸ்தான் என்ற ஞானகுருவை நோக்குவார் இப்படி நோக்கிப் பார்த்தவுடன் கெஞ்சிக்கதறி அழுது வணங்கிய அறிவுள்ளவர்களிடத்தின் மனத்துள்ளிருந்துகொண்டு நம்முடைய நாயகன் யென்னென்ன அதிசயங்களை உண்டாக்கியிருக்கிறான் பார்த்தாயாவென்றும் நாயகன் யெவ்விதமாக இருக்கிறான் பார்த்தாயாவென்றும் ஞானகுரு காண்பிப்பார் இப்படிக்கு காட்டிய ஞானகுருவையும் நம்முடைய நாயகனையும் கண்ட அடியார்கள் ரொம்பவும் ஆனந்தம் பொங்கி அமிர்தம் சாப்பிடுவார்கள்.

இதைத்தவிர மஸ்தான்கள் யென்றும் ஞானிகள்யென்றும் வேடம்தரித்து காசுக்கு ஆசைகொண்டு வருகிறவர்களிடம் நாம் நம்முடைய நாயகனை தெரிந்துகொள்ள முடியுமா? முடியாது. இவ்வளவு உரிமையுடன் காப்பாற்றிவருகிற கோழிமுட்டைப் போலுள்ள அண்டபிண்ட சராசரங்கள் அனைத்தையும் நம்முடைய நாயகன் வெறுத்து இனி நாம் தனித்து இருக்கவேணுமென்கிற உதிப்புள்ள காலமுண்டு அந்தகாலத்தில் தண்ணிக்கு அதிகாரியை நினைப்பான் உடனே மேலேயுள்ள ஆகாய கெங்கையும் கீழேயுள்ள சமுத்திரமும் பொங்கி ஒரே சுடுதண்ணியாகிவிடும் இந்த சுடுதண்ணியினிடமாக இப்போது நாம் பார்த்து வருகிற வஸ்த்துக்களும் பார்க்காத வஸ்த்துக்களும் நீத்து ஒரே தண்ணியாகிவிடும் இவ்விதம் ஆனவுடன் காத்துக்கு அதிகாரியை நினைப்பான் காத்து யெல்லா தண்ணீரையும் வாளச் செய்யும் இப்படி செய்தானவுடன் பூலோகம் வானலோகம் ஒன்றுமேயில்லாமல் அழிந்து யேகவெளியாக யிருக்கும் இந்த

யேகவெளிக்குள்ளே நம்முடைய நாயகன் ஒரு சோதிச் சுடரூக வீற்றிருப்பான் இப்படியாகிய சோதிச்சுடறை நாயகனைக் கண்ட நாயன்மார்கள் தன்னுடைய நெற்றிக்கண்ணினுல் உற்றுப்பார்த்து தானும் நாயகனும் யேகபோகமாயிருப்பார்கள்.

இதுவரையில் யெழுதியுள்ள வெண்பாவும் வாசகங்களும் நம்முடைய யெண்சாண் திரேகத்திற்குள்ளேயே பொருள் தெரிந்துகொண்டு அகக்கண்ணுல் பார்க்கவேண்டியது முகக்கண்ணுல் பார்க்கக்கூடிய காரியங்களை ஒன்றுமே யெழுதவில்லே.

ஆனதால் ஒரு புல்லின் நுனியில் ஒட்டியிருக்கும் பனித்துளி யளவாகிலும் அமிர்தம் சாப்பிட்ட புண்ணியவான்களுக்கு தெரிந்திருக்கும் இவ்விதம் தெரிந்து நாலாம்படியிலேறி அமிர்தம் சாப்பிட்ட புண்ணியவான்களை தெரிசிக்க அடியேனும் காத்திருக்கின்றேன்.

(சுவாதிஷ்டானம் முற்றிற்று)

மூன்ருவது கலைக்யாணக்கவி.

பாலமணக்கும் வாயால் பரிமளிக்கும் வாக்கதனை
தேன்மணக்கும் இன்பம் தருவாய்.

நாளாகு மல்லால் நாமிருவர் கூடிநிற்க
வேளாளன் வித்தைத் தறி.

ஆக்கையெனும் பிறவி அறந்தாங்கி நிற்பதற்கு
வோற்கையெனும் செய்கை யுளதே.

அல்லல் வினையகற்ற வல்லாற்குச் சொல்வினையின்
வல்வினையும் மகன்றே யரும்.

கட்டழகிப் பெண்ணணைய இஷ்டமிலர்
பொட்டழகிப் பெண்ணையுமே புணரார்.

தழுவினர் நழுகார் வழியறியாமற்
வழுவினர் தொழுகா றரன்.

புகழுடையோன் புண்ணியனும் புவியதனிற்
இகழுடையோன் யென்றைக்கும் மிருள்.

ஆறுபேரில் அறியா வொருபேரைப்
பாரீர் றகமுழுதும் தேடி.

கெட்டவர் பட்டாறிருட்டில வொளியார்
சுட்டது வெல்லாம் சுடரே.

ஆளுரும் பேராளுரும் மற்றேளுரும்
காலூரும் காண்பா றணுகில்.

பொருளுடையோர் புண்ணியம் செயினும்
அருளுடையோரை யறித லரிது.

யாரிருந்தென் யார்போயென்
பாரிற்றுணை யலவோ பாரீர்.

கற்றவ ரெனினுங் கருதினுங் ஆம்
உற்றவ றலரே யுணர்வீர்.

தேள்க்கடித்தாற் விழமிறங்கு மலால்
கோள்க்கடித்தாற் வினையிறங்கா ஆம்.

செய்வினை நல்வினை செயவே ஆம்
உய்வினை யெலாம் பற.

கண்டால் விண்ணப்பம் காணு அலால்
சென்றால் விண்ணப்பம் ஆகா.

தேறினர் யேறினர் வான்ப்
பாரினிற் றேவரின் சிரன்.

செய்நன்றி யறியா றெவரினும் மடவர்
மெய்நன்றி புரியா றவர்.

அரந்தரும் வெய்யோன் றெவரினும் ஆங்
துறந்தவ றெனவுங் கூர்.

வெய்யவன் கனல் வெருள ஆங் அனல்
பொய்யுறையசர் புந்தி.

காய்ந்த மறத்தடியிற் றோய்ந்த மழையதனைப்
பேய்ந்தவான் திறமே வுறம்.

தோய்ந்த பாலதினிற் ஆய்ந்த மக்களிலர்
காய்ந்தபின் காய்ச்சியதே நெய்.

வாய்ப்பாடும்பட்டு வயறதனிற் சுடுபாடும்பட்டு
தாய்பாடும் பட்டார் தநி

யேகாந்த மாகியவர் மோகாந்த மாணடயிற்
சாகரந்தம் பெற்றதனால் தான்.

வோய்ந்துபோம் காற்று உடலுயிரை
வோயாமற் றோய்ந்தறிவர் துறவர்.

அழுது வணங்காதார் தொழுதின மலர்
பழுதிலா மவரும் அலர்.

செல்வமுள ளறிவிலா ளாயின்
அல்லல்வினை யகல மாட்டா.

காரிடியும் பெய் மழையும்
பாரினி லிலா பாழ்.

விண்ணுலகோர் விரும்பினும் மழையை
மண்ணுலகோர் யிலர் மழையில.

கண்ணுங் கருத்தும் உள்ளவோர் கோன்
நண்ணவும் வினையை நாடிலறாவர்.

வேட்ப்பனின் வாற்றை விரிமலர் மனுவாம்
கேழ்ப்பவரின்பாற் கிருகிரு ஆம்.

வல்வினை தீர்ந்து வரும்வினையைத் தீர்பாற்
உள்ளளவும் இன்பம் இலார்.

அறன்வீட்டின்பம் .அறிவிலான் வீடிலான்
பிறவீட்டின்கண் புகுவார்.

தையலிறலவோ வையக மாய்கை
பைய்யு ஊழ்வினை நுழை.

ஆத்துமக்கோல் அறியும் அரசர்பாற்
சேத்துமக்கோலின் ஆழ் செல்லாவாம்!

காலை அறிந்து நின்றால் முடியைத்தரும்
வேலை அறிந்து நின்றால் வெற்றித்தரும்
சேலை யவிழ்ந்து நின்றார் மாய்கையிலர்.
கோலை நாட்டி நின்றார் குருடறலர்.

பானையுடைந்தாற் றேனை யுறிஞ்சாற்
சானையறியார் ற்றவமிலர்

பொழுதெனுங் கண்ணே தொழுதிலா றெனினு
மெழுதிய வெழுத்திற் றென்னஆம் பயன்.

வேளையும் மூளையும் விரிபுன லாட
காலையும் நூலையும் கருது.

கூற்றெனுங் கூற்றன் குறக்கூற்றன்
யேற்றினன் யேற்றன் இருளிலற்.

யேறத்தெரிக்கோ திருக்குமிடம் அறிவாற்
பாரிற் றுணைவர்க்கு வேண்டார்.

உறை இலாதவர் தெருவழி நாணூர்
உற்றவ றெனினும் அறிகிலர்.

கொண்டைச் செருக்கும் குமிளம்பழஸ்த்தனச் செருக்கும்
பிண்டம் ஒன்றால் பிரியும்

பெண்களி னழகைப் பெருக்கியே பாற்கிற்
றங்கத் தூளைமுழுதும் அருவருப்பாம்.

மன்னர்கைக் கோலும் மறவுரியோர் மணக்கோலும்
அன்னை யவள் கையிலமரும்.

வாணியம் செய்ய வகையறிவோர் பொருள்
கோணி நிறைந்து குலுங்கும்.

வாணிபம் செய்ய வகையறியார் மனம்
கேணியி லாழ்ந்த கிளி

காணியை முழுதும்ஆள நினைப்போர் மனப்
பேணிலாதவர் பிழை

வேகாக்கால் அறிவோர் சகாத்தலம் அறிவோர்
போகா றொருநாளும் நறகு

பெண் கண்ணியிற் பட்டவர் பக்ஷிஆம்
வன் கன்னியர் மாய்கை வலையதாம்

ஐந்தலை நாகம் அறவிந்தான் ஆட்டுவான்
உந்தலை நாகம் உச்சியிலாடும்

பெண்கொண்டார் பித்தனாவார்
விண்கொண்டார் வெறியிலாவர்

செற்றிறந்தார் வெற்றியுலர் மோக
மற்றிருந்தார் புத்தியுளர்

முலைப்பாலருந்த முப்பூவும் மலர்ந்ததினால்
மலைப்பா லருந்தினால் அமுர்தம்

வேண்டினாற் கின்பம் வெகுண்டாற் கில்பேரின்பம்
தோண்டினா லூறும் கேணி

கலைநிலத்தோன் கண்டறிவுளோன்
பொருள் நிலத்தையும் பூண்பார்

ஊசிமுனை வாசலுக்குள் வொற்றைக்காலைத் தூக்கி
வாசிவழி நிற்போற் மாசிலர்

வொற்றைக்காலை ஊசிமுனை வாசலுக்குள்
யேற்று மவரே யின்பம்

கண்டவர் விண்டிலர் அகத்துமம்
விண்டவர் கண்டில ராவர்

நாற்சதுர வீடதனிற் நாயகனின் றாள்போற்றி
மேற்சதுர வீடமறவற் மேல்

வீடுகண்டிலற் கோடுதாங்கிலற்
காடுவாழும் பேர்மன மதாம்

வேலைத்தாங்கினற் காலை வோங்கினற்
மாலைக் கட்டியவ றவராம்

அறனொருகால் அவளொருகால்
சிவனொருகால் ஆனதே திருக்கால்

ஆடினும் ஆடுவள் பாடினும் பாடுவள்
தேடினும் தேடுவ ளவளே

புரமூன்றும் மெரித்தவன் சிவன் அவற்கு
இறங்கி நின்றவன் க்யானி

வேண்டிநோற் தன்னை தீண்டிலர் பெற்றோர்
தாண்டிநோற் கெல்லாம் பெற்றோருமே

கட்டையிற்சொற்கம் கட்டிய க்யானிகள் அவற்கொரு
நெட்டையன் வெட்டிய கேணியினால்

வொற்றைக்கால் நெட்டையா மிருகால் குட்டையாம்
முட்டுக்கால் மூன்று மவையே

இருளிலான் பொருளுளான் வென்றைக்கு மழிவிலான்
அருளுடை யோரின் அன்பால்

மனமுருகி நின்றால் மதமொடுங்கி நிற்கும்
குணமுடைய ருவரு மவரோ

மதமூன்று மில்லாற் பதம்பெறுவர் அறனடிபாற்
றகமுழுதும் இருளிலையா மவற்கு

நோன்புளற் கோபம் நுண்ணிய ஆக்கை
சாண்புனல் அறியா அழுக்கு

அறிவிலாற் தமக்கு அருள் வுபதேசம்
பழுதையின் பாம்பே யாம்

கெருவமுளன் கெடுநற கன்னிருளன்
வொருவருமே தீண்டா றவனை

சுட்டிக்கால் முட்டி சுழிக்கால் லேறும்விதம்
குட்டிக்கண் ணுள்ளதே பார்க

மூன்றரும்பு பூத்தவரும் முழுவயிறம் பாய்ந்தவரும்
சாண்டரும் மின்பம் காண்பார்

ஆறுமுகமும் ஒருமுகமாய் அமைக்க வல்லார்
ஊறும் அமுர்தம் உண்பார்

உச்சிக் குழியில் ஒழுகும் தேனமிர்தம்
மச்சுக் குள்ளிருந் தருந்துவர்

முட்டினன் முட்டி முடிகொண்டான் கிட்டி
யெட்டினன் இறைவனின் பால்

மூச்சொடுக்கி ஆத்துமத்தை முட்டவிட்டோர்
பேச்சொடுக்கி நிற்பார் பெரியோர்

மூச்சுவிடார் உடலை உயிர்காக்கும்
மூச்சுவிட்டோ ருயிரை யெமன்காப்பான்

கன்னியின் மோகம் அறமுண்ணியன் போகம்
நண்ணிய வினையிலாற் குண்டு

நூலேணி மேலேறி நுட்பமாய் நிற்போற்கு
கோலேணி வேண்டிலரே குரு

ஒற்றைக் காலில் ஆடிய சிவனார்
மற்றுங்கால் யேன் தூக்கவில்லை

கண்ட தாரைஊதி கண்டவர்கள் காதவிந்தை
உண்டவர்கள் அமுரி புளியமுற்தம்

மூலாதாரன் மூழுவயரன் சப்பாணி
யேலாதவன் யெழுந்திருன்

யேலாதவனை யெழுந்தருளச் செய்குமவர்
வாலீபம் மென்னும் வளம்பெருவர்

சுவாதிஷ்டானம் சுழிமுத லறிந்தோர்
ஆதி பகவனும் பிர்மா

ஆதி சரஸ்பதி அருளளிப்பாள்
சோதி விளக்கையும் தருவாள்

மணி பூரகமெனும் மகாவிஷ்ணு வாமவர்
கோணி நிமிறக் குலுக்குவர்

மாயா லெக்ஷிமி வடிவெனு மழகி
வோயா வேலை வொருவிடம் நிலையாள்

அனாகதத்தில் லமற்ந்திரும் ருத்திரன்
கணகணவெனும் தீயைக் கொளுத்துவர்

தீச்சுடராகிய ருத்திரியாம் பெண்
ஆச்சுது ஆச்சுது கொடுகொடு வென்பாள்

விசுத்தியாம் மய்யன் அவர்முகம் ஆறும்
கழுத்தினி லணியும் ருத்துராக்ஷம்

மயேஸ்பரியாம் பெண் வெள்ளியாய் வந்தவள்
காயஸ்திரி ஜெபம் கணிப்பாள்

ஆக்ஞையாகிய சதாசிவ மவரும்
வாய்க் கெளிதாகிய மூச்சே

தாயெனும் மனோன்மணி சேய்தனை யன்பாய்
வாயிலா மொழிகளா லருள்வாள்

உச்சியிற் கெங்கை உத்தமிப்பெண்ணா மவளருள்
பற்றுவற் பசியிலாதவர்

குண்டலி சத்தி கொடிய மாய்கையாள்
விண்ணவர் யாவரும் வெருள்வர்.

(மணிபூரஹம் முற்றிற்று.)

நான்காவது கலை கீர்த்தனை.

179236

ஆதிகணபதியை யடுத்தேன்யான்
ஆதிகணபதியை யடுத்தேன்

ஆதியும் அந்தமும் சொந்தமாய் நின்றிடப்
பாதிமதியணியும் பரமனைக்கண்டிட. ஆதி

ஆதியின்னருளினால் ஆதிசேஷன் தன்னையும்
அடக்கி மனந்தெளிய முடக்கியான் படுத்துமே. ஆதி

சோதியின்னொளியால் சூரியன் சந்திரனை
காதிலணிந்து சிவன் காக்ஷியைக்கண்டிட. ஆதி

தேகம் பொய்யென்றுமே சிந்தை நொந்தயர்ந்து
ஆகமப்படியான் அன்புடன் தொழவே. ஆதிகண

கன்னல்மொழி மாதாவே
கண்ணிலென்று காண்பதெப்போ.

கன்னிப்பருவமாக வந்து
கையிலெடுத்து முத்தங்கொடுத்து
பின்னிய பாசத்தின் பின்னல்விடுக்க
பிள்ளையை கையா லெடுத்து தூக்க. கன்னல்

மன்னர் புகழும் மாகாளி சத்தியே
மைந்தனை தூக்கி மார்பிலணைத்து
கொங்கைகொடுத்து குளிர்முகம்செய்து
சங்கையைப்போக்கி சனனமெடாமல். கன்னல்

வேடிக்கைகாட்டி வினைகளைப்போக்கிப்
பாடிப்படிக்கவும் பாவம் விலகவும்
ஜோடியாய் ஆண்கிளி பெண்கிளி றண்டையும்
விநாடிக்குள் ளுச்சிக் கூண்டிலடைக்கவும். கன்னல்

அடிமனேன் மணி வுனையான்
அடக்கும்வகை யெனக்குச் சொல்லடி

அருள்மறையாகிய அமுர்தம் கொடுத்தென்னை
அணைத்தொருமுத்தம் தருவாயடி. அடி

அன்புடன் வுனையான் அடிபணிந்தேற்றிட
அடியேன் முடிதனில் அமர்ந்திடுவாய் அடி

அன்னையென்றுனைநம்பி அடைக்கலம் புகுந்தேன்
அருள்மொழி பொழிந்திட அடியேனுக்கருள்வாய். அடி

அசையாமல்நின் றான்றிடச்செய்குவாய்
அத்தன் றிருவடியைப் பெற்றிடச்செய்குவாய் அடி

அந்தகன் கையிலென்னை காட்டிக்கொடாமலே
அடிமலர் சென்னிமேல வைத்திடுவாய். அடிமனேன்

அமுர்தம் ஊட்டும் பெண்ணே யெந்தன்
அங்கமுழுமையும் சங்கை விலகிட அமுர்தம்

அமுர்தம் ஊட்டுவாய் அகந்தன்னில்வைத்துமே
அணிமுத் துதித்திட அந்தரம் சென்றிட. அமுர்தம்

சுந்தரமாகிய சோதி யொளிமுடி
தந்தரமாகவே சள்ளையில்லாமலே
பந்தனம் செய்பவும் ஸ்தம்பனம் பண்ணவும். அமுர்தம்

மன்மதன் வாதையை மாற்றவும் யேற்றவும்
உன் மதம் தந்து வுலகினில் வாழ்ந்திட
தன்மயம் தோன்றிடச் சாவெனக் கில்லாமல். அமுர்தம்

தொந்தி வயற்றினுல் தொந்தா வின்றியே
யெந்தன்கை வாளினுல் யெமனைச் செயித்திட
உந்தன் மகிமையை வுலகம் மரிந்திட. அமுர்தம்

ஆடிய பாதத்தைத் தேடியான் பூசிக்க
அன்புடன் வரந் தருவாய். ஆடிய

மோடிய தாகவே ஆடிய பாம்பினை
முத்தமிட் டாரமாய் பூண்பாய் வெளியில்

லோடிய காற்றினை லோடத்தி லேற்றியே
வுன்பாதம் கண்டுமே நின்றுயான் தெரிசிக்க. ஆடிய

வாடிய மனதுக்கு வந்துன் னருள்தந்து
பாடிய பாட்டிற்கு பகையொன்று மின்றியே
கூடிய பாதத்தைக் குருவிஞ லரிந்திடச்
சாடிட நாடிடச் சண்டன் வருமமே. ஆடிய

சிவதரிசனம் செய்வாய் மனமே
சிவ தெரிசனம் செய்வாய்

சிவதரிசனம் செய்து நம்
பவ முழுமையும் கொய்து
சவமதாக யெண் சரணிலிருந்திட. சிவ

குப்புர வீழ்ந்து குனிந்து நிமிருமல்
அப்புடன் தேயு வாயுவின் பிரிதிவில்
ஒப்பிய மனமே நீ யோங்கி யாகாயத்தில். சிவ

காசிதல ந்தன்னில் வாசியை ஆசையாய்
மாசில்லா மனதிஞல் லரிந்துநாம் சேவிக்க
தேசிகன் திருவடி தினமும் பணிந்துநம். சிவ

சிவ கணங்களும் நாமளும் ஒன்ருகச்
சேற்ந்து நிஷ்டையில் லோய்ந் தயற்ந்துள்
பாய்ந்து திருவடி பாதத்தைக் காணவும். சிவ

காவடி கட்டினேன் யான் பாவியொரு
காவடி கட்டினேன் யான்

காவடி கட்டினேன் கால்ரெண்டும் தூக்கியே
சேவடி தன்னையும் சிரசின்மேல் வைத்துமே. காவடி

பாவனையாகிய காவடி தனைக்கொண்டு
பால்ச்செம்பு ரெண்டினால் பாலம் கடந்திட காவடி

வேலவன் தனைக்கண்டு விதிமதி றண்டினால்
மேலவன் திருவடி மேவியே சென்றிட. காவடி

அபிஷேகம் செய்துயான் அமூர்தமும் சாப்பிட
அண்டமெல்லாம் அதைக் கண்டு களித்திட. காவடி

யென்குருவே யெனக் கிருக்கும் குறைமுழுதும்
யேகிடச் செய்குவீர் யென்குருவே

சரிகை கிரிகையென்ற யோக ஞானமதில்
சார்ந்திடமனம் வோய்ந்திட ஆசையும். யென்குருவே

வரிசையாகிய ஆறையும் விடுத்து
மண்டல மூன்றினில் மதிலினுட் புகுந்து
கண்டு கொண்டற்சனை மலற்களைக் கொய்து
விண்டலம் முழுமையும் மேவியான் பூசிக்க. யென்குருவே

புளியம் பழத்தினின் வோடுபோலாக்கி
புனிதனாகவே புவிதனை யரிந்திட
யெளியவன் சுப்பய்யா தேசிகன் தன்னையும்
யிணையடி தனில்வைத்து யின்பமாய்காற்பாய். யென்குருவே

பத்து வயதுடைய பெண்—அவள்
பாவைக்கடத் தாணவள் கண்
சத்து சித்தாநந்தம் பண்—அவை
தத்திமித் தோமெண நண்
அகமகிழ்ந்திட முகமலர்ந்திட
ஆநந்தத் தேனையுண் டன்புடன் வாழ்ந்திட
அய்யன் திருவடியைப் போற்றுவீர்
தினம் யேற்றுவீர் மலர் தூற்றுவீர்.

வொன்றும் அறியாமல் வுனை
அறிந்தால் நலம்தானே
நன்றாய் வரந் தருவாய்
வென்றும் சுகம் பெறவே. வொன்றும்

உனைக்கண்டால் மனம் கூசுமே
வினை சென்றால் நலம் மாகுமே
பனைநின்றால் கனி யாகுமே
யெமனை வென்றால் பல ஞருமே. வொன்றும்

வெந்துமனம் நீறதாய்
நொந்துமனம் வேகவே
பொந்துநுழை யாமலே
நைந்துமனம் சோரவே வொன்றும்
பாசவினை போகவே
பாவம் தொலைந் தேகவே
வாசமணம் வீசவே
தாசனெனப் பேசவே வொன்றும்

மனம் கலங்குதே சிவன்
தினம் முழங்குதே
மனங்கலங்கியே பிணம்பிரிந்ததும்
ஜனங்களின் மாய்கைக் குணங்களை பார்த்து. மனங்க

ஜெனனம் மெடுத்ததும் மரணமடுத்ததும்
ஜெகந்தன்னின் மாய்கையை வுகந்தினி பார்த்ததும் மனங்க

பாவையர் கூற்றினைப் பார்த்து மகிழ்ந்ததும்
பாவமென்றரியாமல் பாசவினையாலும் மனங்க

சாவோமென்றரியாமல் சந்தோஷமானதும்
போவோமே நரகுக்கு நமன்வந்தழைத்திடில் மனங்க

வந்தது போதும் சிவன்
தந்தது போதும்

கந்தமலற்குழல் கன்னிகையாகியும்
சிந்தை மனோன்மணி விந்தையதாகியும்
யெந்தன் பிறன்யெனை யீன்றவளாகியும்
தந்தையும் மாகவும் சகலமும் மாகியும். வந்தது

சந்ததமுந்தனை சாவுமுன் சிந்தனை
தந்துவுன் றளினை தாமரைமலரினை
சொந்தமாய் யெனக்கருள் நிந்தனைசெய்யாமல்
கந்துகமாகிய கைதனில்மோதகம். வந்தது

இந்தவுலகத்திற்ச் சொந்தமொன்றில்லையே
சந்தைக்கூட்டமென்று சந்ததம்தோணுதே
வந்தெனைக் காத்தருள் வம்புசெய்யாமலே
வுந்தனை நம்பினேன் வுலகமிகழாமல் வந்தது

விதிவசம் பாரும் யென்
வினைவசம் தீரும்

சதிசெயும் ஆசைப் பசாசினைத்தூரத்திச்
சாடவொட்டாமலே காரும். விதிவசம்

கதிதா வருவீர் கருணையும் புரிவீர்
பதிதனிலிருந்து பாமனைத் துதிக்க
கதிரொளிவீச மதிகலை விரிய
அதிசயம் தெரிய துதிசெய வாமருள் விதிவசம்

தகியிது காரும் யித்தருணத்தில் வாரும்
திதியெனும் மாய்கை வதிதனில் வீழ்ந்து
மதிமுகம் வாடினேன் மலர்களை சூடினேன்
சகிசுகம் தேடினேன் சண்டாளனாகினேன் விதிவசம்

கடவுளிருக்குமிடம் கண்களால் பார்ப்பாய்
திடமுடன் மனதைத் தேற்றியே யெடுப்பாய் கடவுளி
வுடல்போனால் வுனக்கொரு-சொந்தமு மில்லையே
இடமின்றித் தவிக்காமல் யிப்பவே பார்ப்பாய் கடவுளி

படையுட னிருக்கின்ற பணமெனும் பொருளையும்
வுடையுடன் பொன்னையும் வுகந்துமே யணியாமல்
தடையன்றிக் கடவுளை ஜல்தியில் பார்ப்பாய்
குடையென்னும் நிழலில்-மனம்குவித்துமே நிற்பாய் கடவுளி

கடிநாய்க் கோபமென்னும் கண்ணியி லகப்பட்டு
வெறிநாயைப் போலவே வீதியில்த் திரியாமல்
தரிதரி முரிமுரி சரிசரி. யிதுவேளை
புரிபுரி ஜெபதபம் புண்ணிய குருவினால் கடவுளி

யேசுக்கிந்த வாது செய்கிறீர்
யென் மீதிலென்ன தோஷம் சொல்லுவீர்
பாதகன் னான்படும் கஷ்டம்
பார்த்து மனமிரங்க வில்லையோ யேசுகிந்த

காதலித்தேன் வுன்னை நம்பினேன்
கருணைவைத்து யென்னை யாளுமே
பேதக மிலாமலென்னைச் சேர்ந்து ஆளுமே
பெரியவனேவுன் திருவடியைப்-பெற்றுவாழவே யேசுக்கிந்த

பாதகம் செய்தோழி யாவனோ
பக்தரிடம் சென்று வாழ்வனோ
தீதகம்செய்திய னவனோ
திருக்கருணை யன்புபெற்று-தினமும் வாழ்வனோ யேசுக்கிந்த

சாதனம் செய்யாது தாழ்வனே
சாதுசங்கமம் பெற்று வாழ்வனே.
பாதுகாத்து யென்னையாளும்-பரமசுருபமே
சேதுபந்தனம் ஸ்நாநம்செய்து-தீர்த்தமாடவே யேதுக்கிந்த

விடிந்தவுடன் பணம் மென்று மனம்
விரைந்து தேடுதே
கடிந்து நமன் வந்தவுடன்
காலில் வீழ்ந்தால் விடுவனே
படிந்து பூமியில் நமஸ்காரம்
பண்ணினாலும் விடுவனே விடிந்த

மடிந்துபோகுவாய் மன
திடிந்து சாகுவாய்
வொடிந்து போகுவாய் தேகம்
நொடிந்து நோகுவாய் விடிந்த

குடித்துரியும் பெண்டீர் பிள்ளை
கண்டவினை யென்ன லாபமோ
படித்து மனம் துடித்தும் யென்னை
பிடித்தும் யெமன் அடித்தும் துணை
யெனக்கார் வருவரோ பினைக்கார் வரவரோ
யெனைக்காரும் கடவுளே தினம்தானும் தம்முளே விடிந்த

மனங்கலங்காமல் குலமிகழாமல்
வரந்தருவாய் குருபரனே
பணம் பணமென்று தினதினம் தந்து
பையல் மனங்களிக்க தையலர் தனக்களிக்க மனங்க
உலகினில் விந்தையன் உன்னருள் சிந்தையன்
உனைவேண்டினேன் யென்னையாண் டருள்
வினையற்றவா யெமதுற்றவா
கனநத்துவா க்யானமுற்றவா மனங்க

விதிதனில் நின்றும் மதிதனைக் கொண்டும்
சதிசெய் பகைதனை ஜல்தியில் வென்றும்
அதிபதியுந்தனை யரைக்ஷணம் பிரியா
பதிதனை யீவாய் கதிதனைத் தாராய் மனங்க

பகையிருக்குமிடத்தை குணமதாய்
பயமிருக்குமிடத்தைக் கனமதாய்
வகைவகைப் பொருளை குறைவின்றி யளிப்பாய்
பகையெனும் வினையைப் பகைத்துமே யறுப்பாய்
மனமது மகிழ யினமது புகழ
கனமதாய்த் தருவாய் குணமதாய் யெனக்கு மனங்க

கண்டுகொண்டால் இனிப்பிரியோம் சுவாமியை
கண்டுகொண்டால் இனிப்பிரியோம்
அ - உ - யெட்டுக்குடி
அதை யெட்டிப்பிடி அதை யெட்டிக்குடி கண்டு

சாஸ்திர மிருக்குது பார்த்துக்கொள்ளு
நேத்திர மிருக்குது கண்டுகொள்ளு கண்டு

உள்ளிருந்தால் இது உலக அற்புதம்
தள்ளி வோடிவிட்டால் இது நாத்தப்பிணம் கண்டு

முன்கோபம் வேண்டாம் பின்பாபம் வேண்டாம்
மூலமுதலை நீர்கண்டு கொள்ளும் கண்டு

அகாறம் யென்பது யெட்டுக்குடி
உகாறம் யென்பதால் கட்டிப்பிடி
உள்ளிருக்கும் கள்ளைச் சொட்டிக்குடி கண்டு

செல்வக்கண்மணியே யெனைச் சேரவாருமே
அல்லல் வினையகல ஆளவாருமே செல்வ

பொல்லாத காயத்தை புழுதியில் வைத்தாலும்
நல்லாயிருக்கவும் நமன்கொண்டுபோகாமல் செல்வ

அல்லும் பகலும்யெனை யாண்டருள் செய்திட
கொல்லன் துருத்தியும் ஊதாமல் நின்றிட செல்வ

எள்ளள வாகிலும் யின்பம் கொடுத்தமுது
வள்ளலாகிய பதம் தந்தெனைக் காற்றிட செல்வ

கள்ளியென் றென்னையும் தள்ளிவிட் டோடாமல்
பள்ளியறையிற் சென்று படுக்கவும் வாருமே செல்வ

பிள்ளையாரகிய பெரியவா யென்றும் வுமை
பிரியமாய் யான்கூட அரியதவம்செய்தேன் செல்வ

இருவரும் ஒருமுகம் மாகவும் கூடுவோம்
இருளெலாம் வெருண்டோடிப் போகவும் செய்குவோம்
இருவரும்

பருவ மழைபெய்யவும் பயிர்முகம் வாடாமல்
தருவெனும் கற்பகத் தடியினின் நிழலினில் இருவரும்

கருவி கறணங்கள் ளோய்ந்திரு வருங்கூடி
களிப்புடன் மகிழ்ச்சியாய் விழிப்புடன் புகட்சியாய் இருவரும்

பாரினில் நம்முன்னோர்கள் பணிந்து பதவிபெற்ற
காரியம் யாவற்றும் சீருடன் யாம்பெற இருவரும்

வாலைப்பருவம் வந்து வாழ்வெல்லாம் கைக்குவந்து
சோலைகிளிகளென சுகமதாய் வாழ்கவே இருவரும்

சந்திரர் சூரியர் இருவர் கொடிபோடவும்
அந்தரவாசிகள் ஆசிகள் கூறிநிற்க இருவரும்

இந்திரன் தனக்களித்த இன்பமுள்ள அமூர்தத்தை
புந்தியினுட் புகட்டவும் அந்திபகலரியாமல் இருவரும்

(அனுகதம் முற்றிற்று).

ஐந்தாவது கலைநெறி.

இந்தப் பூவுலகமானது பெண்பிரவிகளுக்குச் சொந்தமே தவிர ஆண்பிரவிகளுக்குச் சொந்தமில்லை யென்பதாகும்.

பெண்பிரவியானது மாயாவதாரமாகும் ஆண்பிரவியானது மாயவலைக்குள்ளகப்பட்டுழுழுகக்கூடியது யெவ்விதமென்றால்:—

நம்மைப் பெற்றோர்களாகிய தாய் தந்தையர்கள் மயா சம் மந்தத்திலகப்பட்டு கலவிசெய்யும் காலத்தில் சுக்கில சுரோணிதம் இரண்டும் கூடி உதிரக்குழியில் கருத்தரித்தோம் கருவானது நம் மாதாவினிடமாயுள்ள உதிரத்தை பத்துமாதம் வரையிலும் ஹிரஹித்து வொரு வுருவமாகச் செய்துகொண்டு வெளியாகின்றது பத்துமாதம் வரையிலும் நம்முடைய தாய்மார்கள் யெவ்வளவோ கஷ்டப்பட்டு கெர்ப்பத்தை வெளியாக்குகின்றார்கள் கெர்ப்பத்தில் இருக்கும்போது மூச்சுமில்லை பேச்சுமில்லை சிரசுவெளியானதும் மூச்சும்பேச்சும் பசியும் கோபமும் உண்டாகின்றது குழந்தைக்கு பசியில்லாவிட்டால் கோபமும் வராது இவ்விதம் நம்தாய்மார்கள் நம்மை அழாமல் பால்கொடுத்தும் மலஜலங்களை சுத்தம்செய்தும் பிணிகளணுகாமல் பாதுகாத்தும் யெவ்வளவோ பிரியத்துடனும் யெவ்வளவோ கஷ்டத்துடனும் போஷித்து வருகின்றார்கள் வயது ஐந்துவரையிலும் நமக்கு யாதொன்றும் அறிவில்லாமல் வயறு நிறைந்தால் போருமானதென்றுமிருந்தோம் ஆறுவது வயதில் கல்வியின் அறிவைக்கொண்டும் குடும்ப விற்தியாகவேண்டியதற்காக பெற்றோர்கள் உபாத்தியாயரிடம் நம்மை ஒப்பிவித்துபோடுகிறார்கள் கல்வி கற்று முடிந்தவுடன் இருபத்தி இரண்டாவது வயதில் கல்யாண

மும் செய்து வைக்கின்றார்கள் இதுவரையிலும் பெற்றோர்கள் நம்மைப் பாதுகாத்து வந்தார்கள் கல்யாணமானபிறகு நாம் நம்முடைய சமுசாரத்திற்கு அடிமையாகின்றோம் யெப்படியென்றால்

கல்யாணத்திற்கு முந்தி நாம் யெந்தவீட்டுத் திண்ணையிலும் யெந்தத் திருவாசலிலும் வுறங்கலாம் நம்மை யேன்யென்று கேட்பாறில்லை சம்சாரம் கிடைத்தவுடன் சம்சாரத்திற்குத் தலையாரியாகிய காவலாகின்றோம் பற்றுத்திற்கு கூலிக்காரனாகின்றோம் யேன் இப்படியாகவேணுமென்றால் பெண்மாய்கையானது யெதைச்சொன்னாலும் கேட்கவேண்டியிருக்கின்றது அதெப்படியென்றால் குடிசை சின்னதாகயிருந்தால் வோட்டுவீடு கட்ட ஆசையுண்டாகின்றது வோட்டுவீடாகயிருந்தால் மெத்தைவீடாகக் கட்டவேண்டியிருக்கின்றது கையில் ஆயிரம் ரூபாயிருந்தால் பதினாயிரமாகச் செய்யவேண்டியிருக்கின்றது, பதினாயிரத்தை லெக்ஷமாகவும், லெக்ஷத்தை கோடியாகவும் பெருக்கவேண்டியிருக்கின்றது, இவ்வளவும் யேதுக்காகயென்று நம்முடைய சம்சாரத்தைக்கேட்டால் நம்முடைய பிள்ளைகள் நமக்குப்பிறகு நம்மைப்போல் குடித்தனம் செய்யவேணுமென்று சொல்லுகிறார்களேதவிர நமக்குத்தான் யென்றும் வொருவரும் சொல்லுவாரில்லை

ஆகையினால் இவைகளெல்லாம் பெண்ணாகிய மாய்கையைக் கொண்டுதான் வுண்டாகின்றது பெண்ணாகிய மாய்கையைக் கொண்டுந்தான் அழிந்தும்போய்விடுகின்றது அழிந்துபோகக் கூடிய காலத்தையும் ஆகிவரவேண்டிய காலத்தையும் வொருவரும் கண்டுகொள்ளமுடியாது யெல்லாமாய்கையைக் கொண்டும் வுண்டாகின்றதேயல்லாமல் மனிதர்களைக்கொண்டும் வொன்றுமே உண்டாகவில்லை.

மாய்கையென்பதற்கு திருஷ்டாந்தம்:— அமாவாசையில் பூரணச்சந்திரனுடைய பிரகாசம் தோன்றாது பூரணச்சந்திரனில்

அமாவாசை என்னும் யிருளும் இல்லை ஒருமனிதனுக்கு ஐஸ்வரியம் உண்டாகுங்காலத்தில் அவனுடைய வீட்டில் பூரணச்சந்திரனாகிய பிரகாசம் குடியிருக்கும். தரித்திரம் உண்டாகும் காலத்தில் அவன்வீட்டில் அமாவாசையென்னும் இருளானது குடியிருக்கும் இவைகளைத்தெரிந்து அறிந்துகொண்டு தரித்திரகாலத்திலும் நாம் துக்கப்படக்கூடாது ஐஸ்வரியமுள்ள காலத்திலும் நாம் சந்தோஷப்படக்கூடாது இவையெல்லாம் சந்திரனுக்கு யெவ்விதம் கலைகளுண்டாகி கலைகள் மறைவாகின்றதோ அவைபோல். மனிதர்களுடைய ஆத்மாவும் செல்வமும் வுண்டாகி சந்திரனுடைய கலையைப்போல் பிரகாசித்து மறைவாகின்றது இவையெல்லாம் மாயாசக்தியின் வேலை இந்த பூவுலகத்தில் மனித ஜென்மங்களுக்கு சூரியன் அறிவாகவும் சந்திரன் சாக்ஷியாகவும் நமக்கு முன் உண்டாக்கப்பட்டிருக்கின்றது ஆகாயத்திலுள்ள நட்க்ஷத்திரங்களெல்லாம் சந்திரனுக்குச் சொந்தமேதவிர, சூரியனுக்கு யாதொரு சொந்தமுமில்லை. அவைபோல், நம்முடைய பிள்ளைகளும், நம்முடைய ஆஸ்திகளும் நம் சம்சாரத்திற்கு சொந்தமேதவிர நமக்கு யாதொரு சொந்தமுமில்லை வற்றுப்பார்த்தால் யாதொரு சொந்தத்தையும் காணேம் யெல்லாம் மாய்கையாகிய நம்முடைய சம்சாரத்தைக் கொண்டும் உண்டாகின்றது சம்சாரத்தைக்கொண்டும் அழிந்து போகின்றது நமக்கு கல்யாணமாகிறதற்கு முந்தி யென்னவேண்டியிருந்ததென்றால் வயற்றிற்குச் சாப்பாடும் இடுப்பிற்கு வேஷ்டியும் போருமானதல்லவா மற்றவை முழுவதும் கல்யாண மாய்கையைக்கொண்டும் வுண்டானதென்று யேன் தெரிந்து கொள்ளக்கூடாது. மாய்கை யென்பது யெப்படியிருக்குமென்றால் சூரிய கிரஹணத்தைப்போல் புருஷர்களையும் சந்திர கிரஹணத்தைப்போல் பெண்களையும் மறைத்துக்கொண்டு யெதிர்த்து நிற்குமாக்கும்.

மஹாவிஷ்ணுவே மாயாவதாரன் அவனுடைய மாய்கை தான் இந்தப்பெண்களின் அவதாரமாகும் இந்தப்பூலோகம் வானலோகமிரண்டும் மஹாவிஷ்ணுவுக்குச் சொந்தமே தவிர மற்றவர்களுக்குச் சொந்தமில்லை ஆகையினால் பூலோகத்தில் வுண்டாகிய வஸ்துக்களும் வானலோகத்தில் வுண்டாகிய அதிஷ்டாம்சங்களும் மஹாவிஷ்ணு அவதாரமாகிய பெண்களுக்குச் சொந்தமாகுமேதவிர மற்ற ஆண்களுக்குச் சொந்தமேயில்லை.

வானலோகத்திலுண்டாகிய அதிஷ்டாம்சம் யென்றால் இந்த புவனலோகமாகிய பூமியின்கண் பெவ்வளவோ மனிதர்களும் யெவ்வளவோ மிருகஜாதிகளும் யெவ்வளவோ பக்ஷி ஜாதிகளும் பெவ்வளவோ நீரில் வாழும் ஜாதிகளும் இருக்கின்றது தவிர மண்ணுக்குள் இரும்பு, ஈயம், பித்தளை, செம்பு, வெள்ளி, தங்கம் வைரம், வைடூரியம், பச்சை, மரஹதம், மாணிக்கம், புஷ்பராகம், கோமேதகம், முத்து, பவழம் யென்னும் பதினைந்துவகை லோகங்களும் கிடைக்கின்றது.

இவைகள் முழுவதும் யெதைக்கொண்டும் வுண்டாகின்றது யென்று வொரு மனிதன் பிரம்மக்கியான திருஷ்டியால் வுற்றுப் பார்ப்பானேயாகில் அவனுக்கு ஒருநாளும் நரஹம் வந்தணுகாது மோக்ஷவீட்டை தன்னுடைய யெண்சாண் தேகமாகிய கோட்டைக்குள் யெழுச்சாண் கோட்டை நரஹமாகவும் ஒருச்சாண் கோட்டை சொற்கமாகவும் தெரிந்துகொள்வான் யெவ்விதமென்றால் வானலோகத்திலுண்டாகிய அமுர்தத்தைவருணபஹவானாகிய மேகத்தைக்கொண்டும் இந்த பூமியில் சொரியும்படி செய்யாவிட்டால் யென்ன விளைவுண்டாகும் பூமியில் வாழும் மனிதர்கள் யெவ்விதம் ஜீவனம் செய்ய முடியும் பனிரெண்டு வருஷத்திற்கு மழை பெய்யாவிட்டால் யெல்லாம் பாழல்லவா அல்லது இந்த பூமியில்லாமல் கடலில் மழை பெய்தால் இந்த மழைக்குத்தான் யென்னமகிமையுண்டாகும் மழை பெய்யாவிட்டாலும் பூமிக்குத் தான் யென்ன மகிமையுண்டாகும் அதுபோல் இந்த பூலோகத்

தில் வுள்ள பெண்கள் பூமியைப் போலவும் இந்தப்பூலோகத்தில் உள்ள புருஷர்கள் மழையைப் போலவும் பாவித்து வாழ்நாள் முழுவதையும் கழிக்கவேண்டியதவசியமாகும் இவ்விதம் பூலோகத்தில் வுண்டாகிய அதிசயங்களை ஒரு மனிதனானாலும் ஒரு மனுஷியானாலும் தன்னுடைய பெண்சாண் தேகத்திற்குள் கண்டு கொண்டு தன்னுடைய தேகத்தை பூமியாக பாவித்து தன்னுக்குள் ஆகாயமென்னும் உச்சியில் இருக்கக்கூடிய அமுர்தத்தை மூலாதாரத்தில் பொழியும்படியாகச் செய்வார்களேயானால் இந்த பூமி வாழ்வதைப்போல் யெப்போதும் வாழ்வார்கள் ஒரு நாளும் எமன் வந்து உயிரைக் கேட்கமாட்டான் இது நிச்சயம்.

விசுத்தி முற்றிற்று.

ஆறாவது கலைக் கோடு

இந்தியாவில் இந்துக்களில் இரண்டுவிதமாகிய நாமம் ஏற்பட்டிருக்கின்றது அதாவது சிலபேர்கள் பாதம் வைத்த நாமமும் சிலபேர்கள் பாதம் வைக்காத நாமமும் போட்டிருக்கின்றார்கள் இவ்விதம் போட்டிருக்கும் இரண்டுவித நாமக்காரர்களும் வொருவருக்கொருவர் யென் நாமம் பெரிது வுன் நாமம் பெரிது யென்றும் வடகலை தென்கலை யென்றும் வழங்கியும் சண்டையும் செய்துக்கொள்ளுகின்றார்கள்

இதற்கு சாக்ஷி யெப்படியென்றால்

பாதம் வைத்த தென்கலை நாமமானது ஸ்ரீராமன் அவதாரத்தில் யாவர்களும் தெரிந்துகொள்ளும்படியாக தன்னுக்குள்ளிருக்கும் ஆத்மாவின் பாதம் ஒன்றும் சந்திரன் பாதம் ஒன்றும் சூரியன் பாதம் ஒன்றும் ஆகப்பாதம் மூன்றையும் மூன்று காலாக நெற்றியிற்போட்டு காண்பித்தார்.

அதெப்படியிருக்குமென்றால் நம்முடைய நெற்றியின் புருவ மத்தியின் கீழ் சுழி முனையின் மேலாக சக்தியின் பாதம் ஒன்றும் சிவனுடைய பாதம் ஒன்றுமாக நின்று ஒரு முகூர்த்த காலத்திற்கு ஒருவராக மாறி மாறி நிர்த்தனம் செய்கின்றார்கள் இந்த இரண்டும்தான் பாதம் வைத்த வெள்ளைக்கோடாயிருக்கின்றது. இதற்கு திருஷ்டாந்தம் இந்த பூலோகத்தில் சந்திரன் சூரியன் இல்லாவிட்டால் நாம் வுற்பத்தியாகியும் தொழிற் செய்யவும் முடியாது அதுபோல் நம்முடைய நெற்றிக்கண்ணினிடமாக சந்திரகலை சூரியகலை இரண்டுமில்லாவிட்டால் நாம் அழிந்து போய்விடுவோமல்லவா அதற்காகத்தான் பாதம் வைத்த இரண்டு வெள்ளைக் கோடாகிய பட்டாநாமத்தைப் போட்டுக் காண்பித்தார் இவ்விதமாகிய இரண்டு வெள்ளைக்கோட்டிற்கும் மத்தியில் யிருக்கும் சிகப்புக்கோடானது நம்முடைய வுச்சியில் கெங்கையானவள் யிருக்கின்றாள் அந்த கெங்கையானவள் பெருகி அமுர்தமாக நம்முடைய மூலாதாரத்திற்கு வழிந்தோடவேணுமென்பதாகப் போட்டுக்காட்டிய சிகப்புக் கோடாகயிருக்கும் இவ்விதம் போட்டுக் காட்டிய பாதம் வைத்த நாமத்திற்கு ராம நாமமென்ற பெயராகும்.

பாதம் வைத்திராத வடகலை யென்னும் நாமமானது ஸ்ரீ கிருஷ்ணாவதாரத்தில் தெளிந்தஞ்யானிகள் தெரிந்துக்கொள்ளும் படியாகப் போட்டுக்காட்டிய நாமமாகும் அதெப்படியென்றால் சந்திரகலை சூரியகலை யென்னும் வெள்ளைக்கோடாகிய இரண்டு பாதங்களையும் தூக்கி வுச்சியிற் கொண்டுபோய்' அடக்கம் 'செய்ய வல்லபம்வேணுமென்பதாயும் மூலாதாரத்தில் அமர்ந்திருக்கும் ஆத்மாவென்னும் ஆதிசேஷனை ஆராதாரத்தை கடத்தி வுச்சியிற் கொண்டுபோய் அடக்கம் செய்ய வல்லபம் வேணுமென்பதாயும் இவ்விதம் மூன்றையும் ஓரே யிடத்தில் அடக்கம் செய்துக்கொள் வார்களேயானால் அவர்களுடைய வுச்சியிற் இருக்கக்கூடிய கெங் கையானவள் அமுர்தத்தைப் பொழிந்துகொண்டிருப்பாள் யென்

பதாக சிகப்புக்கோட்டை மத்தியிற்போட்டுக்காட்டினார் இந்த பாதமில்லாதவடகலைநாமமானது கிருஷ்ணநாமமென்றபெயராகும்

ராமாவதாரமானது தேவாம்சத்தான் அதற்கு யாதொரு சந்தேகமுமில்லை ஆயினும் ராவணாதிகளுடைய ஆத்மாவை வாங்கவேண்டியதற்காக வந்ததேதவிர பிர்ம்மக்யானியாக பூலோகத்தில் வாழ வேணுமென்பதாக வரவில்லை ஆகையினால் பாதம் வைத்தநாமத்தைப் போட்டுக் காட்டிவிட்டு மறைவாகிவிட்டார்.

கிருஷ்ணாவதாரமோ அப்படியல்ல கிருஷ்ணன் சிசுவாகி வெளிவந்த காலத்தில் தன் மாமன் கம்சன் வதைசெய்து போடுவானென்று ஆயர் சேரியில் மாற்றலாச்சுது பிறகு பூதகியைப் பால்கொடுத்துச் சாகச்செய்யும்படியாக அனுப்பினான் பூதகி செத்தாளே தவிர கிருஷ்ணன் சாகவில்லை பிறகு எவ்வளவோ பிள்ளைகள் கம்சன் செய்தான் அவைகளையெல்லாம் தட்டிக்கொண்டும் தப்பித்துக்கொண்டார் இன்னும் ஆயர் சேரியில் தன்மாதா அசோதையினிடம் குழந்தைவடிவாகவும் மற்ற ஆயர்பெண்களிடம்போய் வெண்ணையைத்திருடித் தின்றுப்போட்டாரென்றும் அவர்களைக் கத்திக்கொண்டு தன்தாயிடம் வரும்படியாகச்செய்தும் இன்னும் அநேக மாயமாகியத் திருவிளையாடலும் செய்துகாட்டினார் பற்றுத்திற்கு சப்த்த கன்னிகைகளை அவமானமும் செய்திருக்கின்றார் இவையன்னியில் பதினாயிரம் கோவையர் இவருக்குப் பெண்டாட்டியென்றும் சொல்லுகின்றார்கள், இந்தகிருஷ்ணன், மாய்கையில் சம்மந்தப்பட்டவராயிருந்தால் சப்த கன்னிகைகளையும் பதினாயிரம் கோவையர்களையும் வென்று பூலோகத்தில் தன்மாமன் கம்சனையும் வென்று தான் பிர்ம்மரிஷிகளுக்கு குருவாகவும் தானும் பிர்ம்மக்யானியாகவும் யெங்கே பார்த்தாலும் கிருஷ்ணன் கோவில் யென்பதாகவும் செய்துக்கொள்ளமுடியுமா இந்த அதிசயத்தையும் பிர்ம்மக்கியானத்தையும் தெரிந்துக் கொண்டவர்கள்தான் கிருஷ்ணன் போட்டுக்காட்டிய பாதமில்லாத நாமத்தைப் போட்டுக் கொள்ளலாம்

இந்த பாதமில்லாத நாமத்தின் அதிசயம் தெரியாதவர்கள் யாவர்களும் ராமன் போட்டுக்காட்டிய பாதம்வைத்த நாமத்தை தான் போட்டுக் கொள்ளவேணும் பிர்ம்மக்கியானத்தை அறியாத வேஷதாரிகள் நெற்றியில் சந்திரகலை சூரியகலை யென்னும் இரண்டு பாதமில்லாவிட்டால் வுடனே மாண்டு போய்விடுவார்களல்லவா யேன் இவர்கள் பாதம்வைத்தநாமம் போட்டுக் கொள்ளக்கூடாது ஆனதால் எமனை ஜெயித்தவர்கள்தான் பாதமில்லாத நாமத்தைப் போட்டுக்கொள்ளலாம் இவ்விதம் தெரிந்துக் கொள்ளவும் வேலைசெய்யவும் யேலாதவர்கள் இஷ்டப்படி நாமம் போட்டுக்கொள்ளலாமே தவிர ஒருவர்க்கொருவர் யென்நாமம் பெரிதுயென்றும் உன்நாமம் சிறிதுயென்றும் வடகலை யென்றும் தென்கலை யென்றும் சண்டை செய்துக் கொள்ளவேண்டிய அவசியமில்லையாகும்

(ஆக்ஞை முற்றிற்று.)

ஏழாவது கலை அடக்கம்

இந்தியாவில் யெவ்வளவோ சிவஸ்தலங்களும் எவ்வளவோ விஷ்ணுஸ்தலங்களும் இருக்கின்றது இவைகளின் ரகசியம் தெளிந்த பிர்ம்மக்யானிகளுக்குத்தான் தெரியும் மற்றவர்களுக்குத் தெரியாது யேன் தெரியாதென்றால் கோவில்களுக்குப்போனால் விக்ரஹத்தைக்கண்டு வணங்குகின்றார்களே தவிர யேதுக்காக இந்த விக்ரஹம் செய்து வைக்கப்பட்டிருக்கின்றது யென்று கவனிப்பார்களில்லை அல்லது இந்த விக்ரஹந்தான் சுவாமியாவேரோ இந்த யிடத்தில் சுவாமி யிருக்கின்றதாவென்று தெரிந்தவர்களை கேட்பாருமில்லை

ஆனதினால்தான் சுவாமியின் ரகசியம் தெரியவில்லை அதெப்படி தெரிந்துக்கொள்ளலாமென்றால் இந்தியாவில் யெல்லா கோ

வில் ஸ்தலங்களிலும் மகிமையிராது பிர்ம்மரிஷிகள் பிர்ம்மக்யானிகள் அடக்கமாகியிருக்கின்ற கோவில்ஸ்தலம்தான் மஹிமையுடன் விளங்கும் கலையடக்கமில்லாத கோவில ஸ்தலங்களுக்கு மகிமை இராது ஆனதால் கோவில்களுக்குப் போனால் முதற்தெரிசனம் கலையடக்கமுள்ள இடத்தையும் அதில் அடக்கமாயுள்ள பிர்ம்மரிஷி பிர்மமக்யானிகளையும் தெரிசிக்கவேணும் அந்த பிர்ம்மரிஷிகள் பிர்மக்யானிகள் அடக்கமாகிறதற்கு முந்திதான் சொற்கம் கட்டிக்கொண்ட அடையாளங்களை விக்ரஹமாகவும் பிரஹாரமாகவும் கொடிஸ்த்தம்பமாகவும் அக்நிகுண்டமாகவும் நந்தியாகவும் செய்துகாட்டிய சாக்ஷியாகுமேதவிர இவைகள் முழுவதும் சுவாமியல்ல.

(அபூர்தகலசம் முற்றிற்று)

---

* * *

முப்மத சம வர்த்தனம்

ஆனால் பிராமணாள் ஆனால் இசுலாம் ஆனால் கிருஸ்துவாள்

ஆகிறவரையிலும் பிராமணாளல்ல

ஆகிறவரையிலும் இசுலாமானவர்களல்ல

ஆகிறவரையிலும் கிருஸ்துவாளல்ல

ஆகாதவர்களுக்கு யென்னவுபமானம்

ஆனவர்களுக்கு யென்னசன்மானம்.

நாம் பார்த்தவரையில் இந்தியாவின்கண்ணுள்ள பிராமணாளென்னும் வேஷதாரிகள் யெப்படியிருக்கின்றார்கள் யென்றால் அரையில் பஞ்சக்கச்சம் வைத்து சோமன் வுடுத்திக்கொண்டும் அதற்குமேல் பூணூல் போட்டுக்கொண்டும் கழுத்தில் ருத்திராக்ஷம் கட்டிக்கொண்டும் நெற்றியிலும் மார்பிலும் கண்டத்திலும் வயிற்றிலும் மணிக்கட்டுகளிலும் விபூதி தரித்துக்கொண்டும்

பற்ருத்திற்கு நெற்றியில் சந்தனப்பொட்டுமிருக்கின்றது இவ்விதமாக வேஷம் போட்டுக்கொண்டு சுவாமி தெரிசனம் செய்ய வேணுமென்று அற்சனைக்காக தேங்காய் பழம் கற்பூரம் இவைகளை தாம்பாளத்தில் வைத்துக்கொண்டும் திருவாரூர் கோவிலுக்குள் நுழையும்போது முதற்பிரகாரத்தில் யெதிற்க நந்திகேசுவரர் இருக்கின்றார் இரண்டாம் பிரகாரத்தில் கொடிஸ்தம்பமிருக்கின்றது அதன்மேல் கொடிப்பறக்கின்றது பலவிதமான வாகனங்களுமிருக்கின்றது மூன்றாம் பிரகாரத்தில் நுழைந்தால் அறுபத்திமூவரென்னும் முக்த்திபடைந்தவர்கள் இருக்கின்றார்கள் இவைகளையெல்லாம் தெரிசித்தும் பிரகாரம் சுத்தியும் முடிந்தவுடன் தியாகராஜசுவாமி சந்நிதானத்தில் கொண்டு சென்ற தேங்காயை வுடைத்தும் பழத்தை கிள்ளியும் கற்பூரத்தை தீபமிட்டும் கொழுந்துவிட்டெரியும்போது சுவாமிக்கி யெடுத்துக்காண்பிக்கின்றார்கள் இவ்விதமாக தினம் தினம் வேஷம் போட்டுக்கொண்டு சுவாமிக்கி தீபாராதனை செய்து வந்தால் சொற்கத்திலிருந்துகொண்டு நாலு லோகங்களையும் ஆளமுடியுமா அல்லது மருஜெனனமென்னும் ஆத்துமாவுக்கும் கஷ்டமில்லாமலிருக்குமா நாலுலோகமென்றால் பூலோகம் வானலோகம் பிற்மலோகம் சத்தியலோகம் ஆக லோகம் நாலு இந்த நாலு லோகத்தையும் ஆளக்கூடியவர்கள்தான் தேவாமிர்தம் சாப்பிடுவார்கள் இதையறியாமல் வேஷம் போட்டுக்கொண்டு சுவாமிக்கி தீபாராதனை செய்தவர்கள் யெத்தனை கோடியோ பிராமணாள் ஆத்துமா நீங்கியவுடன் அழிந்துபோய்விட்டார்கள் இவ்விதமாகிய வேஷம் போட்டுக்கொள்ளும் யெத்தனையோகோடி பிராமணாளில் ஒரு பிராமணாள் தன்னைத்தான் வுற்றுப்பார்த்து இதென்ன மாயமாயிருக்கின்றது நம்முடனிருந்தவர்களெல்லாரும் மாண்டுபோய்விட்டார்கள் நாமும் அதுபோல் மாண்டுபோகாமல் நம்மை நாமே ஆண்டுகொள்ளவேணுமென்று நினைத்து ஞான குருவைத் தேடுவார்கள் அதிஷ்டமுள்ளவர்களுக்கு புதையலெடுத்தது போல் யெளிதில் கிடைப்பார்கள் அதிஷ்டமில்லாதவர்களுக்கு யெத்தனைகாலம் தேடினாலும் கண்ணிலகப்

படமாட்டார்கள் அதிஷ்டமுள்ளவர்களை ஞானகுரு பார்த்தவுடன் பாபமெல்லாம் பரந்துபோகும் பிறகு பிற்ம்ம பூசையின் வாலாறுகளை யுபதேசம் செய்வார்கள் அந்த வுபதேசம் யெப்படி யிருக்குமென்றால் யெண்சாண் தேகம் பிர்ம்மாவுக்கு கோவிலாகும் தேகத்தினிடமாயுள்ள ஆத்துமா பிர்ம்மமாகவுமிருக்குமாம் மனம் மாய்கையாகிய பெண்டாட்டி பிள்ளைகள் பேரிலும் மண்ணாகிய நிலங்களின்பேரிலும் பொன்னாகிய ஆபரணங்களின் பேரிலும் பற்றாமல் தன்னுக்குள்ளிருக்கும் பொருள்களைக்கொண்டும் மனதை நிலைக்கச்செய்தும் ஆத்துமாவை வாசிஸ்த்தம்பமாகவும் நிருத்தி அறிவைக் கொடியாகப் பறக்கவிட்டும் தேகத்திற்கு அழிவில்லாமலும் செய்துவைப்பார்கள் இவ்விதம் செய்து முடித்துவைக்கும் ஞானகுருவானவர்கள் தான் பிராமணாள் அந்த பிராமணாளிடம்தான் க்ஷத்திரியர்களும் வைசியர்களும் சூத்திரர்களும் அடங்கி அவர்கள் வுபதேசிக்கும் வார்த்தைகளை வேத வாக்கியமாகக்கொண்டும் அவர்கள் சொல்படியும் நடக்கவேண்டும் அவர்கள்தான் அரையில் கட்டியிருக்கும் பஞ்சகச்சம் பூநூல் ருத்திராக்ஷம் திருநீறு சந்தனப்பொட்டு இவைகளின் அந்தரங்க ரகசியமும் மற்றும் கோவில் ஸ்தலங்களிலுள்ள நந்திகேஸ்பர் கொடிஸ்த்தம்பம் வாகனங்கள் முக்த்தி பெற்ற அருபத்திமூவர் தேங்காய் பழம் கற்பூரம் இவைகளுடைய அந்தரங்க ரகசியமும் சுவாமியின் ரகசியமும் ஆராதார தெரிசனையும் தத்துவ தெரிசனையும் கலை பனிரெண்டின் தெரிசனையும் தெரியும்படியாக வுபதேசிப்பார்கள் இவர்களைத்தவிர பெண்டாட்டி பிள்ளைகள் பிழைக்க வேண்டியும் சாண் வயறு வளர்க்கவேண்டியும் பி. ஏ. பட்டம் பெற்றுக்கொண்டு கோர்டில் வுத்தியோகம் செய்தும் பெண்டாட்டி பிள்ளைகள் வாழும் வீட்டில் பிர்ம்ம பூசையென்னும் சாளிக்கிராம பூசை செய்யும் பிராமணாள் சாகாவரத்தை யெவ்விதம் சம்பாதித்துக்கொள்வார்கள் ஆனதால் யெண்சாண் தேகத்தினிடமாக பிர்ம்ம பூசை செய்ய வல்லபமுள்ளவர்கள்தான் பிராமணாளானவர்கள் தன்னுக்குள்ளிருக்கும் ஆத்தும பூசையை தெரிந்து

கொள்ளாமல் வேஷத்துடன் கோவில் சுவாமி தெரிசனம் செய்கிரவர்களுடைய வேலையானது சரிகை கிரிகையின் வேலையே தவிர யோகம் ஞானமென்னும சொற்க வீட்டின் வேலையில் சம்மந்தப் பட்டதல்ல யோகம் ஞானத்தின் வேலையை அரியாதவர்களுடைய தேகங்களெல்லாம் அழிந்துதான் போகும் அதற்குச் சந்தேகமேயில்லை.

காசிக்குப் போனாலும் பாபம் போகாது சொற்கமும் கிடைக்காது

கதிர்முனை சுழியில் நின்றும்—மதியொளி கலையைக்கொண்டும்
பதியெனும் யெண்சாண் தேகம்—பண்புடன் காக்கவேண்டி
திதியெனும் மாய்கையகற்றி—அரிவெனும் அருவாள் பாற்க
கலைமகளென்னும் பெண்ணால்—கருத்தெலாம் அரிந்துகொள்வீர்

நாகூர் தர்ஹாவின் ரகசியமும் அசனார் உசனார் அதிசயமும்

முஸ்லீம்களென்னும் இஸ்லாமானவர்கள் யாபேர்களும் தெரிந்துக்கொள்ளவேண்டிய கடமையாகும் நாகூர் தர்ஹாவுக்கு வாசல் யேழு வைத்துக்கட்டியிருக்கின்றதும் மணவாரா கட்டியிருக்கின்றதும் அதின்மேல் கொடி யேத்துகின்றதும் சந்தனக்கூடு யெடுக்கின்றதும் யேதுக்காக இவைகளைச் செய்ய வேணுமென்றும் இவைகளை யார் செய்து காண்பித்ததுயென்றும் நாம் தெரிந்துக்கொள்ளவேணும். நாகூர் ஆண்டவர்கள் மறைவாகிரதற்கு முந்திதான் சொற்கம் கட்டிக்கொண்ட அதிசயத்தை தன்னுடைய சிஷப்பிள்ளையாகிய யீசப்பு சாயபுக்கு ஏழு வாசலாகவும் கொடி ஸ்தம்பமும் கொடியுமாகவும் சந்தணக்கூடுமாகவும் செய்து காட்டிய வேலையாகும் இவைகள் முழுவதும் நம்முடைய யெண்சாண் தேகத்திற்குள் இருக்கின்றது தன்னைத்தான் அறிந்துக்கொண்டவர்கள்தான் பாற்கலாம் தன்னைத்தான் அறியாதவர்கள் பார்க்க முடியாது

அசனார் உசனார் செய்து காட்டிய பஞ்சாவின் ரகசியம் யெப்படி யென்றால் அசனார் நம்முடைய மூலாதாரத்தில் இருக்கின்றார் யென்றும் உசனார் நம்முடைய வுச்சியில் யிருக்கின்றார் யென்றும் இந்த மூலாதாரத்தில் இருக்கின்ற அசனார் உச்சியில் யிருக்கின்ற உசனாரிடம் வரவேணுமென்பதாகவும் அசனார் உசனார் இரண்டு பேரும் ஒன்று சேர்ந்தால்தான் நாம் சொற்கம் கட்டிக்கொள்ளலாமென்றும் செய்து காட்டிய வேலையாகும் அசனாரும் உசனாரும் ஒன்று சேராவிட்டால் நாம் சொற்கம் கட்டிக்கொள்ள முடியாது

அதெப்படி அசனார் உசனார் இடம் போகலாமென்றால் அசனாருக்கு மேல் ஐந்து மலக்குகள் இருக்கின்றார்கள் அவர்களைத் தாண்டிப்போகவேணுமென்பதாக ஐந்து விரலைக் காண்பித்தார் ஐந்து மலக்குகளையும் யெவ்விதம் தாண்டிப் போகலாம் யென்றால் நம்முடைய மூலாக்கினியை ஞானக்னியாக கொளுத்தி விட்டால் மலக்குகள் வழிவிடுவார்கள் யென்பதாக அக்னி குண்டத்தை யெறியும்படி செய்து காண்பித்தார்

இவ்விதமாகிய ரகசியங்களை தெரிந்துகொள்ளமுடியாத முஸ்லீமானவர்கள் ஆலீம்கள் யென்றும் ஹக்கீம்கள் யென்றும் வேஷம் போட்டுக்கொண்டும் வூர் வூராகப் போய் ஹதீது சொல்லியும் முரீது கொடுத்தும் பெண்டாட்டி பிள்ளை பிழைக்க வேண்டியதற்தாக காசும் வாங்கிக்கொள்ளுகின்றார்கள் பற்றாக்கிற்கு பள்ளியில் நஹார அடிக்கக்கூடாது யென்றும் இந்துக்கள் பள்ளியண்டையில் கொட்டுக்கொட்டிக்கொண்டு வந்தால் இரண்டு வகுப்பாரும் அடித்துக்கொண்டு மண்டையை வுடைத்துக்கொண்டு சாகும்படியாகவும் சொல்லிகுடுக்கின்றார்கள் ஒன்றும் அறியாதவர்கள் ஆலீம்கள் ஹக்கிம்கள் சொல்லிகிறபடி நாம் செய்தால நமக்கு சொற்கம் கிடைத்துப்போகும் யென்று நினைத்துக் கொண்டு இந்துக்களிடம் சண்டைபோட்டு மண்டையைவுடைத்

துக்கொண்டு கோர்ட்டில் கேஸ் பண்ணி காசைச்செலவுசெய்கிறார்களேதவிர சொர்க்கம் கிடைத்தபாடில்லை ஆனதினால் தன்னைத் தான் தெரிந்துக்கொண்ட ஆலீம்கள் ஹக்கீம்கள் வெளிக்கிளம்பி னோர்னோராகப்போய் ஹதீது சொல்லியும் முரீதுகொடுத்தும் காசுவாங்கமாட்டார்கள் அவர்களை அதிஷ்டமுள்ளவர்கள்தான் பார்க்கலாம் யாபேர்களுடைய கண்ணிலும் அகப்படமாட்டார்கள் பெந்தலைரிலும் தற்ஹாவில் பள்ளியில் கூடுயெடுக்கப்பிரியமுள்ளவர்கள் சுத்துத்தட்டு ஐந்தும் அதற்குமேல் குடம் பதினாறும் அதற்குமேல் நூத்தியெட்டு நட்சேத்திரப்பூவும் அதற்குமேல் கொடியுமிருக்கவேண்டியது அந்தக்கொடியானது மத்தியில் நாட்டியிருக்கும் மரத்தின்வுச்சியில் பரந்துக்கொண்டிருக்க வேணும் இதைத்தவிர மூணுதட்டு நாலுதட்டு வைத்த கூடுயெடுக்ககூடாது அப்படியெடுத்தால் நாள்பட நிற்காது.

இந்தியாவின் கண்ணுள்ள பென்சகோதர்களாகிய யிஸ்லாம் யென்னும் வேழதாரிகள் யெப்படியிருக்கின்றார்களென்றால் சிறு வயதில் சுன்னத்துச்செய்துகொண்டும் கல்யாணமானபிறகு முகத்தில் தாடிவைத்துக்கொண்டும் வொருநாளொன்றுக்கு ஐந்துநேரம் பள்ளிக்குச்சென்று வொதுச்செய்துக்கொண்டும் தக்கிபர் கட்டிக்கொண்டும் தொழுகைக்கு ஆரம்பிக்கும்போது யிமாம் முந்தியும் மற்றவர்கள் பிந்தியும் மேற்கு முகமாக நின்றுக்கொண்டும் வணக்கம் செய்கின்றார்கள் யெதுக்காக யிப்படி வணக்கம் செய்ய வேணுமென்றால் நாம் மவுத்தான பிறகு நமக்கு நரகம் யென்னும் அதாபுக்களில்லாமல் சொற்கத்தில் நாமிருக்கவேணுமென்று நாள்தோறும் நம்மைப்படைத்த ஆண்டவனை நினைத்துக்கொண்டும் முகம்மது நபியவர்களை முன்னிட்டுக்கொண்டும் வேதத்திற் சொல்லியபடி நேரந்தவறாமல் வணக்கம் செய்கின்றார்கள் இவ்வளவும் போதாமல் ரம்ஜான் மாதத்தில் முப்பது நோம்பு யென்னும் நோம்பு பிடித்து பிருந்தேழும் கிழமையில் பல பேழைகளுக்கும் பல சக்காத்துக்களுஞ்செய்கின்றார்கள் இவர்கள் முதந்தயுடன்

ஹச்சுக்குப் போய்த் தொழுகவேணுமென்று மக்கத்துக்கும் போகின்றார்கள் இப்படிப் போகும்போது ஹச்சுனுடைய தொழுகை முடியாமல் மவுத்தாகிறவர்களும் வுண்டு ஹச்சுனுடைய தொழுகை முடிந்து வீட்டிற்குத் திரும்பும் பாதையில் மவுத்தாகிறவர்களுமுண்டு வீட்டிற்கு வந்து மவுத்தாகிறவர்களுமுண்டு யிவ்விதமெல்லாம் யெவ்வளவோ திரேஹ்ராவஸ்தை பட்டு வணங்கித் தொழுதும் நோப்பு பிடித்தும் சக்காத்துக்கள் கொடுத்தும் யெவ்வளவோ பொருள்களை செலவு செய்துகொண்டு மக்கத்துக்கும் செல்கின்றார்கள் ஹச்சும் தொழுகின்றார்கள் இவ்விதமெல்லாம் செய்தும் சக்காத்தினுடைய அதாபு யேன் வரவேணும் றூஹா யேன் பிரியவேணும் இவ்விதம் றூஹா பிரிந்தவர்களுடைய யென்சாண் திரேகம் மண்ணில் யேன் மடித்துப்போகவேணும்

நாம் உண்மையுள்ள தொழுகை செய்து உண்மையுள்ள நோப்பு வைத்தும் வுண்மையுள்ள சக்காத்து கொடுத்தும் வுண்மையுள்ள ஹச்சுனுட தொழுகையும் தொழுவோமானால் நமக்கு அதாபுமில்லை மவுத்துமில்லை நாஹறூமில்லை நம்முடைய றூகும் நம்மை விட்டுப் பிரியாது நம்முடைய தேகத்தையும் மண்ணு திங்காது நெருப்பில் வைத்துக் கொளுத்தினாலும் நெருப்பு பிடிக்காது வாளினால் அறுத்தாலும் அறுபடாது கல்லினால் மண்டையிலடித்தாலும் கல்லு வுடைந்துபோகும் மண்டை வுடையாது கப்பினால் அடித்தாலும் கப்பு வுடைந்து போகும் காபரானவர்கள் யெவ்விதமாகிய கோஷ்டியுடன் சுவாமியைத் தூக்கிக்கொண்டு ஊர்கோலமாத நம்முடைய பள்ளியின் அருகாமையில் வந்தாலும் நமக்கு வொன்றும் தெரியாது பள்ளி யிடிந்து மேல் விழுந்தாலும் நமக்குத் தெரியாது வானமிடிந்து மேல்விழுந்தாலும் நமக்குத் தெரியாது யேன் நமக்குத் தெரியாது யென்றால் நம்முடைய மனம் பெண்சாதி பிள்ளைகள் பேரிலும் மண்ணாகிய நிலங்களிடத்திலும் பெட்டியிலுள்ள பொருள்களினிடத்திலும் செல்லாமல் நம்முடைய றூகு நம்முடைய தேகத்தைவிட்டும் பிரிந்து

விட்டால் நாம் அழிந்து போய்விடுமே யென்றும் நம்முடைய றாகு யிருக்கும்போது நாம் சொற்கம் கட்டிக்கொள்ளவேணு மென்றும் நம்முடைய றாகு யிருக்கும்போது நம்மைப் படைத்த ஆண்டவனைக்கண்டுகொள்ள வேணுமென்றும்
பயத்துடன் இரவும் பகலும் வோயாமல் தொழுகையும் நோம்பும் விடாமல் நம்முடைய தேகமும் மனமும் றாகும் வொன்றுபடச் செய்துக்கொண்டிருக்கும காலத்தில் யார் யெதை யெதைச் செய் தாலும் நமக்கு யெப்படித் தெரியும் நம்முடைய றாகை யெந்தச் சமயம் வந்து மலக்குகள் கேட்ப்பார்களோ அந்தச்சமயம் நாம் குடுக்கவேணுமே யென்ற பயமுள்ளவர்களுக்கு பூவுலகத்திலுள்ள ...கட்டடங்களும் வேஷக்காரரின் வேலைகளும் வொன்றும் சம்மந்த மில்லாமல் தன்னுடைய றாகுனிடம்தான் மனம் சென்றுக்கொண் டிருக்குமேதவிரவேரொன்றிலும் மனம் செல்லாது

நாஹம் யென்றால் இந்தப் பூவுலகம்தான் நாஹலோகம் சொற்கமென்றால் வொருவருக்கும் கட்டிவைத்திருக்கவில்லை அவ னவர்கள் தான் கட்டிக்கொள்ளவேணும் இவ்விதம் சொற்கத்தை கட்டிக்கொண்டும் தன்னுடைய றாகை தன்னுக்குள் அடக்கம் செய்துக்கொண்டும் இருக்ககூடியவர்கள்தான் முஸ்லிம்களென் னும் இஸ்லாமானவர்களாகும்

யெண்சாண் தேகமாகிய பள்ளியில் றாகை அடக்கச்செய்யத் தெரியாமலும் வுச்சந்தலையில் சொற்கத்தை கட்டிக்கொள்ள வழி தெரியாமலும் தவிக்கின்றவர்கள் இஸ்லாமானவர்களல்ல இவர்கள் செய்யும் வேலையானது ஷரிஹத் தரிஹத் யென்னும் வேலையாகு மே தவிர ஹக்கிஹத் மஹரிபத்துனுடய வேலையாகமாட்டாது.

மேல்கண்ட ஹக்கிஹத் மஹரிபத்துனுடைய வேலையைச் செய்யும் ஞான மஸ்த்துள்ளவர்கள்தான் சுன்னத்துனுடைய அந்தரங்கமும் தொழுகையினுடைய விபாமும் இமாமென்னும் மூகப்மது நபியவர்கள் யெழுதிவைத்த புருக்கான் வேதத்தினு

டைய ரகசியமும் முப்பது நோம்பினுடைய பெருமையும் ஹச்சுனுடைய அருமையும் தெரிந்துக்கொள்வார்கள்

தவிர யென்னைப்போல் யிஸ்லாம் யென்னும் வேஷம் போட்டிருக்கும் காபரானவர்கள் சாகுனுடைய வேலைதான் செய்வார்கள் பற்றுக்கிற்கு காபர்களுடன் சண்டையும் செய்வார்கள் இதுதான் வேஷக்காரரின் வேலையாகும் சொற்கத்தின் வேலையை அரியவே மாட்டார்கள்

சொற்கத்தின் வேலையைச்செய்து முடிக்கும் தொழுகையுள்ளவர்கள் நின்றாலும் மரத்தைப்போலும் வுட்கார்ந்தாலும் தேவஸ்த்தானங்களிலுள்ள விக்கிரஹத்தைப்போலும் படுத்திருந்தாலும் மவுத்தானவர்களைப்போலுமிருந்து தொழுகுவார்கள் இதையன்னியில் மனம் வேரும் தேகம் வேறும் றாகு வேருமாக யிருந்து தொழுகிறவர்கள் பாலங்கடக்கவும் முடியாது நபியவர்களைக்காணவும் முடியாது சொற்கத்தையும் பார்க்கமுடியாது

நம்மைப்படைத்த கடவுளைக்கண்டவர்கள்தான் இஸ்லாம் அவனுடன் ரகசியம் பேசினவர்கள்தான் இஸ்லாம் அரஷையும் குருஷையும் பார்த்தவர்கள்தான் இஸ்லாம் நம்முடைய குருவாகிய முகய்யதீன் ஆண்டவர்கள் தன்னுடைய ஆசாக்கோலைக்கொண்டும் நம்மை இஸ்லாம் ஆக்கினால்தான் நாம் இஸ்லாமானவர்களாகலாம்

மாட்டை அறுத்து குருபான் கொடுத்ததினால் சொற்கம் புகுத முடியாது மனதை அடக்கி குருபான் குடுத்தால்தான் சொற்கம் புகுத முடியும் நபியவர்கள் ரூபத்தைக்கொண்டும் வணங்க வேண்டாம் அரூபத்தைக்கொண்டும் வணங்கவேணுமென்று சொன்னதானது நம்முடைய தேகமாகிய ரூபத்தைக்கொண்டும் வணங்காமல் அரூபமாகிய நம்முடைய றாகைக்கொண்டும் வணங்கவேணுமென்று சொன்னதாகும் நம்முடைய தேகம் சொற்கம் புகுத முடியாது நம்முடைய றாகுதான் சொற்கம் புகுத முடியும்

பிஸ்மில் லாஹி ற்றஹிமான் நிற்றஹிம்
கலி மா

லா இலா இல்லல்லா
முகம்மத் இறசூல் அல்லா
அவுது மில்லாஹி மினஷயித்தான் நிற்றஜிம்
யாபீர் ஜல்ல ஜலாலகு
யா முகய்யதீன்

பிஸ்மில் லாஹி ற்றஹிமான் நிற்றஹிம்
கலி மா

லா
இலா
இல்லல்லா
முகம்மத்
இறசூல்
அல்லா
அவுதுமில்லாஹி
மினஷயித்தான்
நிற்றஜிம்
யாபீர் ஜல்ல ஜலாலகு
யாமுகய்யதீன்

இந்தியாவில் கிறிஸ்து மதத்தைத் தழுவி நிற்கின்ற பென் அண்ணன்மார்கள் செய்துவரும் வேலைகளும் அவரவர்களுடைய மனமும் யெப்படி யிருக்குமென்றால்

நாம் கிறிஸ்து மதத்திற் சேர்ந்துகொண்டால் கோற்ட்டில் பெரிய உத்தியோகமும் சம்பளம் ஜாஸ்தியாகவும் கிடைக்கு மென்றும் நாம் இஷ்டமுள்ள அழகிட் பெண்களை கல்யாணம் செய்துக்கொள்ளலாமென்றும் யிஷ்டப்படி வடுப்புகள் போட்டுக்கொள்ளலாமென்றும் நினைத்தவுடன் சோற்கம் கிடைத்துவிடுமென்றும் ஆசைகொண்டும் கிறிஸ்த்துவ நாதா சிலுவையில் அறையப்

பட்டிருக்கின்றாரென்ற வேதவாக்கியப்படி சிலுவையையும் கழுத்தில் மாட்டிக்கொள்ளுகிறார்கள் ஞாயிற்றுக்கிழமைதோறும் தேவஸ்தானத்திற்குச் சென்று வணக்கமும் செய்கின்றார்கள்

இந்த வேலைகள் முழுமையும் யெப்படியிருக்குதென்றால் நம்முடைய சமுசாரம் பிள்ளைகளாகிய குடும்பம் பிழைக்கவேண்டியதற்காக கோற்டில் வுத்தியோகம் செய்கிறோமே தவிர நாம் பிழைக்கவேண்டியதற்கும் நாம் சொற்கத்தில் இருக்கவேண்டியதற்கும் வுத்தியோகம் செய்யவில்லை நம்முடைய காமாந்தகாரத்தை நிவர்த்தி பண்ணிக்கொள்ளவேண்டியதற்காக நல்ல அழகுடைய பெண்களை கல்யாணம் செய்துக்கொள்ளுகிறோமே தவிர சொற்கத்தில் உள்ள கன்னிஹாப் பெண்களை கல்யாணம் செய்துக்கொள்ளவேணுமென்கிர ஆசையில்லை

பூவுலகத்தாருக்கு டம்பமாக வுடுப்புகள் தரித்துக்கொள்ளுகிறோமே தவிர நம்முடைய தேவன் நமக்கு குடுக்கப்பட்ட தேகத்தை அழிவில்லாமலும் புழுத்துப் போகாமலும் வைத்துக்காப்பாத்திக்கொள்ளவேணுமென்கிற ஆசையில்லை

வூரிலுள்ளவர்களும் பட்டணத்திலுள்ளவர்களும் தேவஸ்தானத்திற்குச் சென்று வணக்கம் செய்கின்றார்கள் நாமும் அதுபோல் தேவ கோவிலிற் சென்று வணக்கம் செய்தால் நமக்குச் சொற்கம் கிடைத்துவிடுமென்று நினைக்கின்றார்களே தவிர நம்முடைய தேவனை நாம் கண்டு வணங்கவேணுமென்கிற ஆசையில்லை

கிறிஸ்த்துவ நாதருக்கு சிலுவை கிடைத்ததுபோல் நாமும் ஒரு சிலுவையைச் செய்து கழுத்தில் மாட்டிக்கொண்டால் மகாச்சாரியாராக இருக்கலாமென்று நினைக்கின்றார்களே தவிர கிருஸ்த்துவநாதர் செய்த வேலையைச் செய்யவேணுமென்கிற ஆசை கொஞ்சம் கூட யில்லை இவ்விதம் கிறிஸ்த்துவ வேஷம் போட்டிருக்கும் காயீனுடைய பட்டணத்திலுள்ளவர்களுக்கு யெவ்விதம் சொற்கம் கிடைக்கும் யெவ்விதம் சொற்கத்திலிருந்து வாழ்வார்கள்

இவையன்னியில் வேறெவ்விதம் யெந்த வேலையைச் செய்
தால் நாம் சொற்கவாசியாகலாமென்றால் நாம் தேவனுடைய
மக்களாகவேணும் தேவனுடைய சந்நிதானத்தைக்கண்டுகொள்ள
வேணும் தேவனும் நாமும் குருவும் சீஷனுமாகவேணும் தேவன்
சொற்படி தவறாமல் நடக்கவேணும் பூவுலகத்தில் வுள்ள மாய்கை
யாகிய பெண்ணாசை பொன்னாசை மண்ணாசை யென்னும் மூன்றா
சையை வெறுத்து மனம் சுத்தமாகயிருக்கவேணும் மத வித்தியா
சத்தைப்பாராட்டி இகழ்ச்சியாகவும் புகழ்ச்சியாகவும் பேசாமலிருக்
கவேணும் யெல்லாம் தேவசித்தமென்றே யிருக்கவேணும் தேவ
சித்தமன்னியில் வொவ்வொரு மனுஷனும் வுண்டாகவில்லை யென்
றும் தேவசித்தமன்னியில் வொவ்வொரு மதமும் வுண்டாகவில்லை
யென்றும் தெரிந்துகொள்ளவேணும் தேவஸ்தானத்திற்குச் செ
ன்று வணங்கும்போது மனம் வேறாகவும் தேகம் வேறாகவும் ஆத்
மா வேறாகவும் யிருந்து வணங்காமல் மூன்றையும் வொன்று சேர்
த்து வணங்கவேணும் நம்முடைய தேகம் அழிந்து போய்விட்
டால் நமக்குச் சொந்தமாகிய ராஜாங்கம் மற்றொருவர் கையில்
அகப்பட்டுக்கொள்ளுமே யென்ற பயம் வைத்து தேகத்தை
அழியாமற்செய்துக்கொள்ளவேணும் கிறிஸ்துவநாதர் யென்ன
வேலை செய்தார் யெவ்விதம் அவர் சிலுவையில் அடக்கமானார்
யென்றும் அந்தச்சிலுவையை நாம் கண்டுகொள்ளவேணுமென்
றும் ஆசையை மனதில் அன்புடன் வைத்து தெளிந்த ஞான குரு
வைக்கண்டு கேழ்க்கவேணுமென்றும் பிரியமுண்டாகவேணும்

இவ்விதமெல்லாம் வொரு ராஜச்சக்ரவர்த்தியாவது அல்
லது வொரு ராஜாவாவது அல்லது பொருள்களைக் கணக்கில்
லாமல் வைத்துயிருக்கும் சீமான்களாவது அல்லது வொரு
பெரிய வியாபாரியாவது அல்லது வொரு யேழைமனுஷியனா
வது மனமுருகி நமக்கு தேவன் தகப்பனாகவேணுமென்றும்
நாம் தேவனுக்குப் பிள்ளையாகவேணுமென்றும் இரவும் பகலும்
வோயாமல் அழுது வணங்குவார்களேயானால் நம்முடைய தேவன்

மனமிறக்கப்பட்டு தன் பிள்ளையாக நினைத்த ஆதாமுடைய மகன் ஆபேலுக்குச் சொந்தமாகிய சொற்கமென்னும் தோட்டத்தில் தூக்கிக்கொண்டு போய் வைப்பார் பசியில்லாத அமுர்தத்தையும் வூட்டுவிப்பார் ஆதாமுடைய மகன் காயீனுடைய பட்டணத்தையும் விட்டும் விலக்கிக்கொள்ளலாம்

நாம் நிஜமாகிய தேவபூஜை செய்யாதவரையிலும் காயீனுடைய பட்டணமாகிய நரஹமென்னும் இந்தப் பூவுலகத்தில் நின்று தவிக்கவேண்டியவர்கள்தான் காயீனுக்குச் சொந்தமாக இருக்கலாமே தவிர ஆபேலுக்குச் சொந்தமாக முடியாது ஆபேல் தேவனுக்கு தன்னுடைய ஆத்துமாவை காணிக்கையாக வைத்தும் மனதைப் பலியாகச் செலுத்தினதுபோல் நாமும் காணிக்கை வைத்து பலி செலுத்தினால்தான் ஆபேல் பாலம் கடந்தது போல் நாமும் பாலத்தைக் கடக்கலாம் தேவனையும் பார்க்கலாம் சொற்கத்திலுமிருக்கலாம் நாலு லோகத்தையும் ஆளலாம் தேவனுக்குப் பலி செலுத்த தெரியாதவர்கள் முழுமையும் நரஹத்திலிருப்பார்களே தவிர சொற்கத்தில் இருக்கமாட்டார்கள்

நம்முடைய தேவன் நம்முடைய தகப்பனாகிய ஆதாமுக்கும் நம்முடைய தாய் யேவாளுக்கும் உபதேசம் செய்த தேவ பாஷை மாய்கையில் சம்மந்தப்படாதீர்கள் யென்றும் சொற்கத்திலுள்ள கனியைச் சாப்பிடுங்கள் நரஹகக்கனியைச் சாப்பிட வேண்டாமென்றும் சொல்லியும் மனம் கேளாமல் தேவனுடைய வுத்தரவை மீறி நடக்கும்படியாகவும் நரஹத்தை அனுபவிக்கும்படியாகவும் நரஹ நெருப்பாகிய மாய்கை யென்னும் சாத்தான் பாம்பின் ரூபமாக வந்து யேவாளையே மாத்தியும் ஆதாமை யேவாளுடைய ஆசைக்கி யிணங்கச் செய்தும் இரண்டு புத்திரர்களை பெற்றுக்கொள்ளும்படியாகவும் செய்து விட்டான்

ஆதாமானவர் மண்ணைக்கொண்டும் தண்ணீரைக்கொண்டும் தேவனுடைய காத்தைக்கொண்டும் வுண்டாக்கப்பட்டவர் சாத்

தானானவன் நெருப்பைக்கொண்டும் மாய்கையைக்கொண்டும் வுண்டாக்கப்பட்டவன் ஆனதால் அவனை ஒருவரும் செயிக்க முடியாது அவனை நாம் பகைத்துக்கொள்ளவும் கூடாது அவனுடன் சிநேகம் செய்து அவனுடைய அந்தரங்கத்தை அரிந்து கொண்டு அவனை நம்முடைய வுச்சிக்குழியில் நல்லபாம்பை பெட்டிக்குள் அடக்கம் செய்வதுபோல் சுருட்டிமடக்கிவைத்துக் கொண்டால்தான் அவனை ஜெயித்தவர்கள் ஆகலாம் இவ்விதம் சாத்தானை அடக்கம் பண்ணிக்கொள்ள தெரிந்தவர்கள் தான் ஞானவான்களாகிய கிறிஸ்துவானவர்களாகும்.

இந்தச் சாத்தானில்லாவிட்டால் ஆதாமும் ஆதித்தாயும் பிள்ளைகளை பெறமாட்டார்கள் பூவுலகத்தில் கஷ்டதனையும் அனுபவித்திருக்க மாட்டார்கள் நரகத்தினுடைய அதிசயங்களை அவர்கள் தெரிந்திருக்கவும் மாட்டார்கள் சொற்கத்தினுடைய அதிசயந்தான் அவர்களுக்கு தெரிந்து யிருக்கும் சாத்தான் என்னும் மாய்கை யில்லாவிட்டால் இந்தப் பூவுலகம் இவ்வளவு விற்தியடைந்து வராது சாத்தானை யுண்டு பண்ணினதும் தேவனாலேதான் மனிதனால் உண்டானவனல்ல சாத்தானை ஜெயித்தவர்கள் தான் சொற்கம் புகுதலாம்.

சாத்தானுக்கு சாபமிட்ட காலத்தில் சாத்தான் வொருவர் காலை நசுக்குவான் என்றும் சாத்தானுடைய தலையைமற்றொருவர் நசுக்குவார் என்றும் வுத்தரவாயிற்றல்லவா அந்தசாத்தான் நசுக்கியகால் நம்முடைய பெரியயண்ணன் காயீனுடைய காலாகும் சாத்தனுடைய தலையை நசுக்கியவர் நம்முடைய சின்னண்ணன் ஆபேலானவர் தான் ஆபேலைப்போல் நாமும் சாத்தானுடைய தலையை நசுக்கவேணும் சாத்தானுடைய தலையை நசுக்கினால்தான் நாம் சொற்கத்தில் குடியேறமுடியும் இவைகளை அரியாவிட்டால் நாம் கிறிஸ்துவர்களும் அல்ல சொற்கத்திற்கு போகிறவர்களும் அல்ல மூன்று மதத்திலுள்ளவர்கள் தேகம் அழிந்து போவதுபோல் நாமும் அழிந்து போகவேண்டியவர்கள்தான்.

179236

யேதுக்காக இன்னமும் மதசமவர்த்தனம் என்னும் வர்த்தமானத்தை யெழுத வேணுமென்றால் இந்தப் பரதகண்டத்திலுள்ள மும்மதஸ்தர்களும் மதத்தைப் பெரிதாகநினைத்து வர்க் கொருவர் மண்டையை உடைத்துக் கொள்ளுகின் இடையில் எமன்வந்து உயிரைக் கொண்டுபோய்விடுகிறான் வா அப்போது.

இவர்களுடைய மதமெங்கே ஆங்காரமெங்கே பேச்செங் மூச்செங்கே பொருளெங்கே பிள்ளையெங்கே பெண்சாதியெங் வீடெங்கே ஊரெங்கே பேரெங்கே என்று பாக்கியிருக்கின்றன கள் தன்னறிவைக் கொண்டும் யோசித்துப்பார்த்து நம்முடை தேசத்தில் உண்டாகிய மும்மதபிரகிருதியை எல்லாம் ஒருமதமாக நினைத்து கடவுளுக்கு வழிபட வேணுமென்றும் மும் மதஸ்த்தர்களுடைய மனதையும் ஒன்றுபடச் செய்ய வேண்டியதற்காகவும் கடவுளைக் காணவேணு மென்பதர்க்காகவும் எழுதியதாகும்.

பிர்ம்மக்கியானமென்னும் ஹோம்ரூல் லென்பதற்கு மூன்றர்த்தமுண்டு முதலாவது:—நம்முடைய தேகத்திலுள்ள பொருள்களை நாமே விர்த்திசெய்துகொள்ளவேணும்

இரண்டாவது:—நம்முடைய வீட்டிலுள்ள பொருள்களை நாமே விர்த்திசெய்துகொள்ளவேணும்

மூன்றாவது:—நம்முடைய தேசத்திலுள்ள பொருள்களை நாமே விர்த்திசெய்துகொள்ள வேண்டியது.

காயமிருக்க கருத்தொன்றை யெனக் கருளும்
வோயாக் கவலை யுள்ளுருகித்--தோயாமல்
பாயுங் கருவி தொண்ணூத்தி யாறினால்
சாயாமற் காத்தருளுன் கடனே.

முற்றுப்பெற்றது.